



Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

மலர் 7 | EELA NADU | இதழ் 264

தேசிய தினசரி | National Tamil Daily

விசுவாவசு ஐப். 15 ஐ: ஆகிர் 5 (31-10-65) ஞாயிற்றுக்கிழமை




# 3 ஆண்டுகளில் நவீன துறைமுகம்

## மயிலிட்டியில் மீன்பிடித் துறை

### மந்திரி பிலிப் வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

**காங்கேசன்துறையில் இன்னும் மூன்று வருடங்களுக்குள் நவீன துறைமுகம் அமைக்கப்பட்டு முடிவடைந்துவிடுமென்றும் மயிலிட்டியில் மீன் பிடித்தொழிலின் அபிவிருத்திக்கென மீன்பிடித்துறைமுகம் ஒன்று விரைவில் அமைக்கப்படுமென்றும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்த கைத்தொழில் மீன்பிடி மந்திரி தி ந. பிலிப் குணவர்த்தன தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் உறுதியளித்தார்.**

நேற்றுக் காலை 8-30 மணிக்கு விசேஷ விமானமொன்றில் பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கிய மந்திரி குணவர்த்தனவை யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தமிழரசுக்கட்சி எம். பி.க்களும், தமிழ்க்காங்கிரஸ் எம். பி.யும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மற்றும் அரசாங்க அதிகாரிகளும் மாலை சூட்டி வரவேற்றனர்.

தமிழரசுக்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. தருமலிங்கம், திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு எஸ். கதிரவேற்பிள்ளை, செனட்டர் எஸ். நடராசா ஆகியோரும் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. பெருமையினர், தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. செல்வரத்தினம் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் மந்திரியையும் அவருடன் வந்த மீன்பிடி கூட்டுஸ்தாபன சபைத்தலைவர்கள் திரு. வால்விக்டர், திரு. சாம் சில்வா ஆகியோரையும் வரவேற்றனர். முன்னாள் எம். பி. திரு. லக்ஸ்மன் ராஜபக்ச அவரது மனைவி ஆகியோரும் மந்திரியின் விஜயத்தையொட்டி யாழ்ப்பாணத்துக்கு காரில் வந்திருந்தனர்.

மந்திரி குணவர்த்தன சென்றவிடமெல்லாம் ஆடம்பரமற்ற அமைதியான முறையில் மங்கல இசையுடன் வற்வேற்கப்பட்டார். விமான நிலையத்தில் மந்திரி வந்திறங்கியபொழுது தெளிவாக இருந்தவானம் அவர் மயிலிட்டிக்குப் போய்ச சேர்ந்ததும் திடீரெனமழையைப் பொழிந்தது. மயிலிட்டியிலிருந்து போயிட்டிக்குப் போய்ச் சேர்ந்ததும்வானம் தெளிவாகி தெல்லிப்பளைக்கும் காங்கேசன்துறைக்கும் சென்ற பொழுது கடும் வெயில் எறித்தது.

பலாலி விமான நிலையத்திலிருந்து திரு. செல்வநாயகத்துடனும் மற்றையோடுடனும் மந்திரி குணவர்த்தன மயிலிட்டிக்கு அழைத்துச்செல்லப்பட்டார். வழியில் பல இடங்களிலும் மக்கள் பூரண கும்பம் வைத்து மாலைசூட்டி வரவேற்றனர்.

**மயிலிட்டியில் மீன்பிடித்துறை**

மயிலிட்டி அம்மன்கோவிலடியில் மயிலிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் மந்திரியை வரவேற்று தங்கள் கிராமங்களின் கஷ்டங்களையும் அவர்களின் தேவைகளையும் பற்றி எடுத்துக் கூறினர். மயிலிட்டியில்மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலை ஒன்று நிறுவப்படவேண்டுமென்றும் மயிலிட்டி மீனவர்கள் கடன் முறையில் இயந்திர மீன்பிடிப் படகுகள் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்றும் சூருவளியால் பாதிக்கப்பட்ட மயிலிட்டி மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இவ்வரவேற்புக்கு பதிலளித்து மந்திரி குணவர்த்தன பேசுகையில்: மயிலிட்டி மக்களின் குறைகளைத் தாம் உணர்ந்துகொண்டுள்ளதாகவும் இலங்கையில் பிடிக்கப்படும் மீன்களின் மூன்றிலொரு பகுதி மயிலிட்டிமீனவர்களால் பிடிக்கப்படுவதால் மயிலிட்டியில் மிக விரைவில் ஒரு மீன்பிடித்துறை அமைக்கப்படுமென்றும் உறுதியளித்தார். மயிலிட்டிமக்களின் குறைகளைக் கவனித்து அவற்றை நிவர்த்தி செய்வது பற்றி தாம் ஆலோசனை செய்வதாகவும் மந்திரி கூறினர்.

## "கீரிமலைக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்கவும்!"

மயிலிட்டியிலிருந்துமந்திரி குணவர்த்தனபோயிட்டிக்கு அழைத்து வரப்பட்டார். போயிட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் காங்கேசன்துறை எம். பி. திரு. செல்வநாயகத்தின் சார்பில் செனட்டர் நடராசா போயிட்டிமக்களின் குறைகளை எடுத்துக்கூறினர்,

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை விஸ்தரித்து உற்பத்தியை அதிகரிக்கவேண்டியது அவசியம் தானென்றுலும் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தினுல் போயிட்டிமக்களும், புனித இடமான கீரிமலைப் பகுதியும் பாதிக்காமலிருக்க வேண்டுமென்பதேஇப்பகுதி மக்களின் கவலையென்றும் திரு. நடராசா கூறினர். காங்கேசன்துறை விஸ்தரிப்புத் திட்டத்தின் விளைவாக புனிததீர்த்தமான கீரிமலையின் இரு ஊற்றுக்களில் ஒன்று அடைபட்டுவிட்டதாக சிலர் கருத்துத்தெரிவித்துள்ளதுடன் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தினுல் இலங்கை வாழ் இந்துக்களின் புனிதஸ்தலமான கீரிமலைத் தீர்த்தமும் கீரிமலையிலுள்ள நகுலேஸ்வரர் ஆலயமும் பாதிக்கப்படுமென அஞ்சப்படுவதாகவும் திரு. நடராசா தெரிவித்தார். இது தவிர பரம்பரை பரம்பரையாக தங்கள் நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்துவாழும் போயிட்டிமக்களும் இவ் விஸ்தரிப்புத் திட்டத்தினுல் பாதிக்கப்படவிருக்கிருர்களென்றும் சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கு கற்பாறைகள் உள்ள இடம் இப்பகுதியில் உண்டென்றும் அவர் சுட்டிக்காட்டினுர். கீரிமலையையும் நகுலேஸ்வரர் ஆலயத்தையும் பாதுகாக்கும்பொருட்டு கீரிமலையிலிருந்து முக்கால் மைல் சுற்றளவு எல்லைவரை புனித ஸ்தலமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டுமென்றும் அவர் சொன்னுர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் மந்திரி பிலிப் குணவர்த்தனவை இந்நாளன் கோமாளிப...

(16-ம் பக்கம் பார்க்க)

# சிமெந்து தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டம்

## விரைவில் நிறைவேறும்

### "தேசிய அரசாங்கத்துக்கு அனைவரினதும் ஆதரவு தேவை"

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிமெந்து தயாரிப்பதற்கு முக்கிய பொருளாக விளங்கும் 'கிளிங்கர்' மண் அரைக்கும் ஆலை விரைவில் காலியில் செயல்படத் தொடங்கவிருக்கிறது. இந்த ஆலை சரியான முறையில் செயல்படவும் காங்கேசன்துறையிலிருந்து 'கிளிங்கர்' காலிக்குக் கொண்டு செல்லப்படுவதற்கும் காங்கேசன்துறையில் நவீன துறைமுகம் அமைக்கப்பட வேண்டியதவசியம். இத் துறைமுகம் இன்னும் மூன்று வருடங்களுக்குள் அமைக்கப்பட்டுவிடும். தொழில்கள் விருத்தியடையவும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தியை அதிகரிக்கவும் மின்சாரம் அதிகம் தேவை. இத்தேவையும் விரைவில் பூர்த்தியாகிவிடும். நாட்டின் முன்னேற்றத்துக்கும் தொழில்விருத்திக்கும் சகலமக்களும்தேசீய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டும்.''

இவ்வாறு கைத்தொழில் மீன்பிடிமந்திரி திரு. பிலிப் குணவர்த்தன காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை ஊழியர்கள் அளித்த வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினுர்.

நேற்றுமுற்பகல் 11-40க்கு சிமெந்துத்தொழிற்சாலைக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் வந்துசேர்ந்த மந்திரி குணவர்த்தனவை சிமெந்துக் கூட்டுஸ்தாபன சபைத்தலைவர், மனேஜர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மலர்மாலை சூட்டி மங்கல வாத்திய சகிதம் தொழிற்சாலைவாயிலிலிருந்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

முதல் முதலாக 'கிளிங்கர்' ஏற்றிக்கொண்டு காலிக்குப் புறப்படத்தயாராக விருந்த ரயிலை, தண்டவாளத்துக்குக் குறுக்கே கட்டியிருந்து 'சிவப்பு' நாடாவை வெட்டி, ரயில் என்ஜினுக்கு மலர் மாலையையும் சூட்டி மந்திரி அதன் பயணத்தையும் ஆரம்பித்து வைத்தார். இதன்பின் அவர் தொழிற்சாலையின் பல பகுதிகளையும் சென்று ஆர்வத்தோடு பார்வையிட்டார். பின்னர் தொழிற்சாலை ஊழியர்கள் அளித்த வரவேற்பில் பேசுகையில், தொழிற்சாலையின் முன்னேற்றத்தையும் ஊழியர்களின் சேவையையும் பாராட்டினுர்.

திரு. செல்வநாயகம் மந்திரியை வரவேற்றும் தேசீய அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கத்தையும் பற்றிச் சிறிது நேரம் பேசினுர்.

மந்திரி குணவர்த்தன மேலும் பேசுகையில், நாட்டின் அபிவிருத்தியில் சிமெந்தின் அவசியம் பற்றிகுறிப்பிட்டுவிட்டு சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படுமென்றும் புத்தளத்தில் இரண்டாவது சிமெந்துத் தொழிற்சாலை அமைக்கும் வேலைதிட்டமிட்டபடி நிறைவேற்றப்படுமென்றும் கூறினுர். சிமெந்து பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கவேண்டுமென்றும் அவர் சொன்னுர்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

**சங்கீத வகுப்பு**

திருநெல்வேலி பாரதி கலாமன்றத்தில் பரதநாட்டிய வகுப்புடன் ஐயாக்கண்ணு தேசிகர் அவர்களால் நடத்தப்படும் சங்கீத வகுப்புக்கு 15-11-65க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பாரதி கலாமன்றம்,
அம்மன் வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 15௳ (31-10-65)

# சக்தி வாய்ந்த கூட்டுறவு இயக்கம்

வடபகுதி கூட்டுறவு சம்மேளனத்தின் வருடாந்த மகாநாடு இன்றுநடைபெறுகிறது. இம்மகாநாட்டை கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் ஆரம்பித்து வைக்கிறார். கூட்டுறவு அபிவிருத்தியிலும் விஸ்தரிப்பிலும் தீர்க்கமான கொள்கைகளை உருவாக்குவதற்கு ஆலோசனை கூறக்கூடிய அரசியல் பிரமுகர்களில் ஒருவராக விளங்கும் அமைச்சர் பிலிப் குணவர்த்தன இம் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பது மிகப் பொருத்தமானது மட்டுமல்ல இதன் மூலம் வடபகுதி கூட்டுறவுச் சம்மேளனத்துக்கும் அமைச்சருக்கும் பலன் கிடைக்கலாம். பலநோக்கக் கூட்டுறவுச் சமாஜங்கள், சங்கங்களின் தந்தையாகவிளங்கும் அமைச்சர் குணவர்த்தன கூட்டுறவுச் சமாஜங்களின் பல தரப்பட்ட நடவடிக்கைகளுக்கு வித்திட்டார்.

கடன் வழங்குவது, கடன் நிவர்த்திசெய்வது, வங்கி அலுவல்கள் செய்வது, பாவனைப் பொருள்களில் வர்த்தகம் செய்வது, கைத்தொழில், கமத்தொழில், மீன்பிடித்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, கட்டட ஒப்பந்தங்களை மேற்கொள்வது ஆகிய பல துறைகளிலும் கூட்டுறவுச் சமாஜங்கள், சங்கங்கள் ஈடுபடவேண்டுமென திரு. பிலிப் குணவர்த்தன எதிர்பார்த்தார். கூட்டுறவு இயக்கத்துக்கு அவர் முக்கியத்துவமளித்துப் பேணினார்.

இன்று கூட்டுறவு இயக்கம் தாழ்ந்த நிலையிலுள்ளது. திரு பிலிப் குணவர்த்தன விரும்பிய அந்தஸ்தை கூட்டுறவு சமாஜங்களுக்கும் சங்கங்களுக்கும் அளிப்பதற்கான கொள்கைத் திட்டங்கள் தேசிய அரசாங்கத்தின் ஆட்சியின்கீழ் வழங்கப்பட வேண்டும். இதற்கு அமைச்சர் முயற்சி செய்வாரென எதிர்பார்க்கலாம்.

உற்பத்திப்பொருள்களை கூட்டுறவுச்சமாஜங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து விலைக்குவாங்கி பாவனையாளர்களுக்கு நியாயமான விலைக்கு விற்கிறது. உள்நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களிடம்தான் கூட்டுறவுச் சமாஜங்கள் இப்பொழுது உற்பத்திப்பொருள்களை வாங்கி விற்கின்றன. வெளிநாடுகளிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்தும் உற்பத்திப்பொருள்களை விலைக்கு வாங்கி இங்குள்ள மக்களுக்கு நியாயமான விலைக்கு விற்க வழிசெய்ய வேண்டும், உதாரணமாக இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கு, மிளகாய், மல்லி, சர்க்கரை முதலிய உபஉணவுப் பொருள்களை இங்கு கூட்டுறவுச் சமாஜங்களே நேரடியாக இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இந்த நாட்டிலுள்ள தனிப்பட்ட வர்த்தகர் பலர் வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதிசெய்யவும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யவும் அனுமதியளிக்கப்படும் பொழுது கூட்டுறவுச் சமாஜங்களுக்கும் இறக்குமதி ஏற்றுமதியில் அனுமதி வழங்குவது தவருகாது. வடபகுதியில் கடல் அட்டை உற்பத்திஅதிகம். இங்குஅதை உபயோகிப்பவர்களும் குறைவு. ஆனால் வெளிநாட்டில் அதிக கிராக்கி உள்ள இக்கடல் அட்டைகளை ஏற்றுமதி செய்யும் உரிமை பலநோக்கக்கூட்டுறவுச் சமாஜங்கள் அல்லது கூட்டுறவு மீன்பிடிச் சமாஜங்களிடம் வழங்கப்படவேண்டும். மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத்திடம் இந்த உரிமை ஒப்படைக்கப்படுவதைப்பற்றி ஆட்சேபிக்க இடமில்லை. மீன்பிடிக் கூட்டுஸ்தாபனமானாலும் சரி, வேறு எந்தக் கூட்டுஸ்தாபனமானாலும் சரி இறக்குமதி, ஏற்றுமதி உரிமைகள் எதுவும் ஏகபோகமாக அனுமதிக்கக்கூடாது. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு ஏகபோக உரிமைகள் அளிக்கப்பட்டதுதான் பல சங்கடங்கள் ஏற்படக் காரணம். முன்னைய அரசாங்கத்தின் குறைகளை ஆராய்ந்தறிந்து கொண்டிருப்பதிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதால் எவ்விதபயனும் ஏற்படாது. குறைகளைத்திருத்தி நல்ல முறையில் நடத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் விநியோகமுறைகள் சீர்திருத்தப்படவேண்டும். விநியோகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் கிழங்கு, மல்லி மற்றும் சரக்குச் சாமான்கள் இங்குள்ள தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய முறையில் அனுப்பப்படுவதில்லை. இதனால் தனிப்பட்ட வர்த்தகர்கள் இப்பொருள்களில் கொள்ளை லாபமடிக்கவும் ஏதுவாகிறது. துணிகள், உடுபுடவைகள் சம்பந்தமாகவும் கூ. மொ. வி. ஸ்தாபனம் ஒழுங்கான முறையில் விநியோகம் செய்யவில்லை. சமீபத்தில் தீபாவளிப் பண்டிகைக்கு இங்குள்ள மக்கள் கூ. மொ. வி. ஸ்தாபனக் கடைகளிலிருந்து சேலைகள் பெறமுடியாது போய்விட்டது. இது பற்றியும் ஆராய்ந்து இனியும் இத்தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்பகுதியில் வெங்காயக் கூடுபின்னும் தொழிலை விருத்தி செய்தால் அதன் உற்பத்திச்செலவும் குறையும். வெளிநாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமும் ஏற்படாமல் போகும்.

வடபகுதி கூட்டுறவுச்சம்மேளன மகாநாடு இப்பிரச்னைகளைப் பற்றி அமைச்சருக்குத் தெளிவாக எடுத்துக் கூறுமென்றும் அமைச்சர் இவைபற்றி மந்திரி சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்து ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பாரென்றும் நம்பலாம்.

## உலகமேடை

டி. எம். எம்

## பாதுகாப்புசபை நாடகம்

சென்ற வாரம் பாதுகாப்புசபையில் திரு. பூட்டோ நிகழ்த்திய பிரசங்கம் ஐ. நா.விலும், இந்திய உபகண்டத்திலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சபையிலிருந்து வெளியேறிய இந்தியப் பிரதிநிதிகளை ''நாய்கள்'' எனஅவர் குறிப்பிட்டதே இதற்குக் காரணம். இந்த உவமானம் பொருத்தமற்றது என்பதற்கு, இந்த ''நாய்கள்'' வாலை ஆட்டிக் கொண்டு திரும்பவும் பூட்டோவுக்கு முன் வரவில்லை என்பதே போதுமான உதாரணம். பதிலாக, ''பூட்டோவின் வசைமாரிக்கு ஆயுத பலத்தால் பதிலளிப்போம்'' என திரு. சாஸ்திரி சொல்லும் அளவுக்கு நிலைமை வளர்ந்து விட்டது.

சமாதானத்தைக் காக்கும் கண்ணியமான உலகசபையில் 10 கோடி மக்களின் பிரதிநிதி, 47 கோடி மக்களின் பிரதிநிதிகளை இவ்வாறு தூஷித்தது மனோதத்துவ ரீதியில் இந்தியாவின் ராணுவ மனப்பான்மையை மேலும் கடுமையாக்கியிருக்கிறது என்பது இதன் அர்த்தம். ராஜதந்திரத் துறையில் பாகிஸ்தானுக்கு இது ஒரு கரும்புள்ளி. ''முதிர்ச்சியடையாத ராஜதந்திரி'' என முகம்மது சக்ளா பூட்டோவைப்பற்றி வருணித்தது மிகவும் சரியானதே.

''பாராளுமன்ற சம்பிரதாயம்'' என அலங்காரப் பெயர் சூட்டப்பட்டிருக்கும் நிலையில்கூட, பலநாடுகளின் பார்லிமெண்டுகளில் அங்கத்தினர்கள் தூஷண வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள். ஏராளமான உதாரணங்கள் இதற்கு இருக்கின்றன.

நமது இலங்கைப் பார்லிமெண்டில் கூட பல ஆபாச வார்த்தைகளும், அடிபிடிகளும் ஏற்பட்டிருக்கின்றன, அயர்லாந்து முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த போது பார்லிமெண்டுகளின் தாய் எனக் கூறப்படும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஐரிஷ் அங்கத்தினர்களும், இங்கிலிஷ் அங்கத்தினர்களும் ஒருவருக்கொருவர் உபயோகித்த தூஷணைகளுக்கும், அடிபிடிகளுக்கும் அளவே இல்லை. அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் துப்பாக்கிச் சண்டைக்குக்கூட சவால் விடுத்திருக்கிறார்கள். சிலகாலத்துக்கு முன் இந்திய சட்டசபை ஒன்றில் ஒரு அங்கத்தினர் மற்றோர் அங்கத்தினரை ''கழுதை'' என்று அழைத்ததை பிழையில்லை என சபாநாயகர் அறிவித்திருந்தார்.

ஆனால் தேசீயப் பார்லிமெண்டில் ஒருவருக்கொருவர் பாடும் வசைமாரியுடன் உலக பார்லிமெண்டில் பிரயோகிக்கப்படும் வசைமாரியை ஒப்பிடமுடியாது. உலக சபையில் குறிப்பிடப்படும் தூஷணை குறிப்பிட்ட ஒருவரைப் பாதிப்பதில்லை. அவர் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு தேசத்தையே அது இழிவுபடுத்துகிறது. எனவே பாதுகாப்பு சபையின் 11 அங்கத்தினர்களும் இதை அனுமதித்தது சபையின் கண்ணியத்தைக் கைவிட்ட செயலென்றே கூறலாம்.

கிருஷ்ணமேனன் பாதுகாப்பு சபையில் இருந்தால் பூட்டோ இவ்வளவு தைரியமாக வசைபாடி இருப்பாரா என்றும் சிலர் கேட்கிறார்கள்; உலக சபைகளில் பூட்டோ, மேனன் உத்திகளைப் பின்பற்றிவருகிறார் என்று கருதப்படுவது சரியாக இருந்தபோதிலும், திரு. மேனன் இவ்வளவு இழிவான வார்த்தைகளை எப்போதுமே பிரயோகித்ததில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகளுக்கு மேனன் தீராத் தலையிடி கொடுத்துவந்தார் என்பது உண்மை. சர்வதேச அரசியலில் முதல்தர குழப்படிகாரர்என மேனனை காலஞ்சென்ற அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டல்லஸ் அப்போது வருணித்ததுண்டு. ஐ. நா.வில் மேனன் பங்குபற்றியது மேற்கு நாடுகளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. சூயஸ் நெருக்கடிச் சமயத்தில் இந்த மனப்பான்மை உச்சக்கட்டத்தில் இருந்தது. கிருஷ்ணமேனனுடைய தாக்குதல் எதிரிகளை நிலைகுலையச்செய்யும். ஆனால் பூட்டோ போன்ற இழிசொல்லை அவர் உபயோகித்ததில்லை. கருத்துச் செறிவுடன் அவர் நடத்திய தாக்குதல் கடுமையானதாய் இருந்தாலும், கிருஷ்ணமேனன் முதிர்ச்சியடைந்த முதல்தர ராஜதந்திரி என்பதே இதற்குக் காரணம்.

ஆனால் மற்றோர் விஷயத்தையும் இங்கு மறுப்பதற்கில்லை. இம்முறை பாதுகாப்பு சபைக் கூட்டத்தை இந்தியா கட்டோடு விரும்பவில்லை. அதற்கேற்றாற் போல் திரு. பூட்டோவின் பேச்சு சபைக்கூட்டத்தைப் பகிஷ்கரிக்க, இந்தியாவுக்கு ஒரு சாக்காகிவிட்டதென்பதே அந்த விஷயம்.

பாதுகாப்புசபை சரியான முறையில் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளும் விஷயத்தில் எவ்வளவுதூரம் வெற்றியடையும் என்பதைத் தற்சமயம் சொல்ல முடியாமலிருக்கிறது. யுத்தநிறுத்தம் இப்போது அமுலில் இருப்பதாகக் கூறிய போதிலும், யுத்தநிறுத்தப் பகுதிகளில் ஆங்காங்கே இன்னும் தீப்பற்றுவதும்அணைவதுமாய் இருக்கிறது. அடுத்த கட்டம் படை வாபஸ். இதையும் செய்துவிட்டால் அநேகமாக முக்கால்பங்கு வெற்றி நிச்சயம் எனக்கூறலாம். ஆனால் இரண்டுக்கும் இடையில் காஷ்மீர் சம்பந்தமான அரசியல் பேச்சுக்கள் என்ற பிரச்னை குழப்பப்பட்டுவருகிறது. இதில்தான் உண்மையானபிரச்னை. ஸீக்பிரைட் அரணைப்போலும், மாகினட் அரணைப்போலும், கடுமையாக இருக்கும் இந்தியாவும், பாகிஸ்தானும் இந்த விஷயத்தில் எந்த இலக்கை நோக்கிச் செல்லும் எனக் கூறுவதே கஷ்டமாய் இருக்கிறது. காஷ்மீர் சம்பந்தமான அரசியல் பிரச்னை பற்றிப்பேச இந்தியா ஒப்புக்கொண்டாலே சரியான யுத்தநிறுத்தமும் படைவிலக்கமும் சாத்தியம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நியுயோர்க்கில், ராஜதந்திரம் தோல்வியுற்றால் இந்தோ-பாகிஸ்தான் எல்லையில் டாங்கிகள் மீண்டும் உருள ஆரம்பிக்கும். விமானங்கள்மீண்டும்பறக்கஆரம்பிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

கடைசியாக ஒரு விஷயம். பாதுகாப்பு சபையில் திரு. பூட்டோவின் பேச்சை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் விரிவாகவும், விளக்கமாகவும் அறிவித்திருக்கிறது. இந்தியப் பிரதிநிதிகள் வெளியேறிய கட்டத்தை ஒரு நாடகமாகவும் அது காட்டமுனைந்திருக்கிறது, ஆனால் திரு. பூட்டோ உபயோகித்த ஆபாச வார்த்தைகளைமட்டும் மறைத்துவிட்டது, இந்தியப் பிரதிநிதிகள் உண்மையைக் கேட்க விரும்பாததே வெளியேறியதற்குக் காரணம் என திரு. பூட்டோ குறிப்பிட்டதைமட்டும் அது வெளியிட்டது. ஆனால் உண்மையில் பூட்டோ கூறிய அசல் வசனத்தை மற்றோர் ஸ்தாபனம் பின்வருமாறு கூறியுள்ளது. அது இது தான்:-

''பாதுகாப்புசபை மண்டபத்தைவிட்டு இந்திய நாய்கள் ஓடிவிட்டன. ஆனால் ஜம்மு காஷ்மீரிலிருந்து மட்டும் ஓடவில்லை.''

இந்நிலையில்பாரபட்சமற்ற செய்திகளுக்கு இனியாரைத் தான் நம்புவது?

## ரொடீஷியா

ரொடீஷியா விஷயத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் உணர்ச்சி எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதற்கு, 48 நாடுகள் ஐ. நா. தர்மகர்த்தா சபைக்கு சமர்ப்பிக்கவிருக்கும் தீர்மானமே தக்கசான்றாகும். ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டால் படைபலத்தை பிரிட்டன் உபயோகிக்க வேண்டும் என இந்தநாடுகள் கோரியுள்ளன. ஆனால் அவைகளின் நம்பிக்கையில் மண்ணைப் போட்டுவிட்ட பிரிட்டனின் செயல் பலருக்கு ஏமாற்றத்தை அளிக்கும். பிரிட்டிஷ் துருப்புக்கள் உபயோகிக்கப்பட மாட்டாது என ஸாலிஸ்பரியில் ஆபிரிக்க தேசியத் தலைவர்களிடம் பிரதமர் வில்சன் தெளிவாகக் கூறிவிட்டார். பலாத்கார உபயோகத்திற்கு பிரிட்டிஷ் மக்களின் ஆதரவில்லைஎனக் கூறப்படுகிறது. தற்போது தொழிற்கட்சி அற்ப மெஜாரிட்டியில் உயிர்வாழ்வதால், இந்த அபிப்பிராயத்தை அனுசரித்துத்தான் திரு. வில்சன் செயலாற்றக் கூடும். ஆனால் இது எவ்வளவு தூரம் சரி என்பது கேள்வி. இருந்தபோதிலும் சிறுபான்மையினர்வசம் பிரிட்டன் தானாக அதிகாரத்தை ஒப்படைக்காது என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

திரு. வில்சன் ஸாலிஸ்பரியில் இப்போது என்ன செய்துகொண்டிருந்தார் தெரியுமா? 1961 ம் ஆண்டு அரசியலமைப்பை பகிஷ்கரிப்பதை, ஆபிரிக்கத் தலைவர்கள் கைவிடவேண்டும் என வற்புறுத்திப்பார்த்தார். ஆனால் என்கோமோ போன்ற மக்கள் தலைவர்கள் இதை நிராகரித்து, உடனடியாக ஆபிரிக்க தேசியத் தலைவர்களையும் கொண்ட புதிய அரசியலமைப்பு மகாநாட்டைக் கூட்டவேண்டும் என வற்புறுத்தியிருக்கிறார்கள். தற்போதைய அரசியலமைப்பைத் தேசியத் தலைவர்கள் ஒப்புக்கொண்டால் ரொடீஷியாவைக் கைகழுவி விடுவது பிரிட்டனுக்குச் சுலபமாகிவிடும். அதாவது ரொடீஷியா மற்றோர் தென்னாபிரிக்காவாகிவிடும். சிறுபான்மை வெள்ளையர்கள் சர்வவல்லமையுடன் பெரும்பான்மைக் கறுப்பரை இஷ்டப்படி ஆள வழி திறந்துவிடும்.

அல்ஜீரியா விஷயத்தில் டிகால் காட்டிய உறுதி பிரிட்டனுக்கு இப்போது தேவை. அல்ஜீரிய தேசியவாதிகளுக்கு, சிறுபான்மை பிரெஞ்சுக்காரர்கள் காட்

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
EELA NADU

# கைத்தொழில் மலர்

## இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சி

### திட்டமிட்டு செயலாற்றினுல் வெற்றியடையலாம்

—நமது கைத்தொழில் நிருபர் கானம்—

ஒரு நாடு பொருளாதார வளம் பெறவேண்டுமாஞல், தன்னிறைவு பெற்று விளங்க வேண்டுமாஞல் அந்நாட்டில் ஐம்பது சதவீத விவசாய வளர்ச்சியும், ஐம்பது சதவீத கைத்தொழில் வளர்ச்சியும் அவசியம் தேவை. ஒரு நாடு வெறும் விவசாய நாடாக இருந்துகொண்டு அதில் எவ்வளவு வளம் பெற்று வளர்ச்சியடைந்தாலும் தன்னிறைவு பெறமுடியாது; மற்றும் அவசிய தேவைப் பொருட்களுக்கு வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். இதுபோலவே வெறும் கைத்தொழில் நாடும் தனது உணவுப் பொருட்களுக்கு வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டி ஏற்படும். ஆகவே ஒரு நாட்டின் சுபீட்சத்தில், பொருளாதார சுதந்திரத்தில் விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும் சரிசமமான பங்குண்டு.

#### சுதந்திரமடைய முன்னர் . . .

இலங்கைஒருவிவசாயநாடு எனக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. கிழக்கின் களஞ்சியமாக அமைந்த பெருமையும் அதற்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை. அது சரித்திரக் கதை. ஆனுல் ஆங்கிலேய அடிமைத்தளத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற நாம் பதினெட்டு வருட காலமாகியும் இன்னும் பொருளாதார சுதந்திரமடையவில்லை என்பது தெளிவு. ஆங்கிலேயர் நாட்டை அடக்கி ஆண்டது மட்டுமல்லாமல், இலங்கையின் இயற்கை வளத்தை தங்கள் நன்மைகளுக்குப் பயன்படுத்தி, இங்கிருந்த செல்வத்தைத் தங்கள் நாட்டுக்குக் கப்பல் ஏற்றித் கொள்ளை லாபம் அடித்தது மட்டுமல்லாமல், தங்கள் நாட்டிலிருந்து சகல பொருட்களையும் வருவித்து மேலும் இலங்கையின் செல்வத்தை உறுஞ்சி எடுத்தனர்.

தங்கள் சொந்த நாட்டில் கைத்தொழில் துறையில் முன்னேறிவந்தபிரிட்டிஷார் தாங்கள் ஆட்சி செலுத்தி வந்த நாடுகளில் கைத்தொழில்துறைக்கு ஊக்கமளிக்கவில்லையென்ருல் தங்கள் நாட்டு உற்பத்திக்கு வியாபாரம் தேடிக்கொடுப்பதற்காகவே அவர்கள் அவ்விதம் செய்தார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்கமுடியாது. இலங்கையரை வெறும் சோம்பேறிகளாக்கும் நோக்கத்துடன், நாறு காலி உத்தியோகங்களில் மக்களுக்கு ஆசை பிறக்கத்தக்கதாக அவற்றுக்கு முக்கியத்துவமளித்துவந்த பிரிட்டிஷார், விவசாயத்துறையிலோ அன்றி கைத்தொழில் துறையிலோ இலங்கையருக்கு ஈடுபாடு பிறக்க வழி வகுக்கவில்லை, அவன் அன்னியன் தன்நலத்தை மட்டுமே கருத்திற்கொண்டு எங்களை அடிமைகளாக்கி ஆண்டுவந்தான். எனவே இந்த நாட்டை முன்னேற்றவேண்டும் என்ற எண்ணம் அவனுக்குபடாதிருப்பது இயல்பே.

#### மாருத மனப்போக்கு

அன்னியரின் ஆட்சியில் சோம்பேறிகளாக நாற்காலி உத்தியோகங்களில் மோகங்கொண்டு வெளிநாட்டுக்கு எங்கள் செல்வத்தை கொட்டிக்கொடுத்த எமது இயல்பு எமக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னரும் மாறவில்லை. காற்சட்டை உத்தியோகங்களிலேயே எமது கவனத்தைச் செலுத்திவந்தோம். அரிசி தொடக்கம் உப்பு வரைக்கும், துணிகள் தொடக்கம் குண்டூசி வரைக்கும் வெளிநாட்டையே எதிர்பார்த்திருந்தோம். தேயிலையும், ரப்பரும் தான் எங்கள் பொருளாதாரமாக இருந்தது. இயற்கை அன்னையின் அந்தச் செல்வத்தையும் தக்கமுறையில் பயன்படுத்தாது, அதன் மூலம் கிடைத்த வருமானத்துக்கு மேலாக சகல பொருட்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியை அதிகரித்து குட்டிச்சுவராக்கினேம். சுதந்திரமடைந்து பத்தாண்டுகள் சென்றுங்கூட எமது பரிதாபநிலையை நாமே உணரத்தவறிவிட்டோம். இக்காலத்தில் ஆட்சியில் அமர்ந்திருந்த அரசியல் தலைவர்களுக்குக்கூட இலங்கையின் பரிதாபநிலை புரியவில்லை. விவசாய நாடு என்று சொல்லில் மட்டும் இருந்ததே தவிர, அரிசிக்கும் சீனிக்கும், புளிக்கும் மிளகாய்க்கும் வெளிநாடுகளையே எதிர்பார்த்திருந்தோம். சோம்பேறிகளாகி விட்டால் பிறகு திருந்துவது கஷ்டம் தான். காலம் இப்படியே கழிந்தது.

#### 1956 ம் ஆண்டில் ஏற்பட்ட புத்துணர்ச்சி

1956-ம் ஆண்டளவில்,

(15-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தொழில் அபிவிருத்தி

### தொழிற் பேட்டை ஒன்று இங்கும் தேவை

என். சிவநேசன், எம். எஸ்ஸி. [பொருளாதாரம்] லண்டன்
(யாழ்ப்பாண மாவட்ட பொருளாதார சமூக அபிவிருத்தி கவுன்ஸிலின் கௌரவ காரியதரிசி)

தென்னிலங்கையிலுள்ள 'எக்கல' தொழிற் பேட்டையைப்போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்கலாம். அதற்கான உதவி கிடைக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டு இளைஞர்களின் தற்போதைய நிலை பற்றியும் வருங்காலத்தில் அவர்கள் சிறப்புடன் வாழக்கூடிய வழிவகைகள் பற்றியும் கட்டுரையாளர் இங்கு தெளிவாகக் கூறுகிருர்.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கைத்தொழில்துறையில் ஈடுபட்டு நிலைமையில் நல்ல மாற்றத்தை விரைவாக ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரை எமது மாகாணத்தைப் பொறுத்தவரை தொழில் துறையிலுள்ள பொதுவான பிரச்னைகளையும் இத்துறையை விரிவுபடுத்துவதில் இருக்கும் வாய்ப்புக்கள் பற்றியும் தெளிவாக்குமென நம்புகின்றேன். நாம் வர்த்தகத்திலும் விவசாயத்திலுமே அதிகம் ஈடுபட்டுள்ளதாலேயே இவ்வாறு விளக்கம் அவசியமாகின்றது. எமது இளைஞர்களின் பிரச்னைகளைத் தீர்க்கவும் நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கவும் நாம் கைத்தொழில் துறையில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் நமக்கு இத்துறையிலிருக்கும் வாய்ப்புக்களை ஆராய முற்படுவோம்.

#### கைத்தொழில் மயம் ஏன்?

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரக் குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு கைத்தொழில் மயமாக்குவது ஏன் அவசியம் என்று கேள்வி எழலாம். யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் நிலப்பரப்பில் ஐம்பதில் ஒரு பகுதியைக் கொண்டுள்ளது. ஆனுல் நாட்டின் ஜனத்தொகையில் சுமார் பதினைந்தில் ஒரு பகுதியினர் இங்கு வாழ்கிருர்கள். இங்கு ஒரு சதுரமைலுக்கு 1000 பேருக்கு அதிகமானேர் வாழ்கிருர்கள் ஜனநெருக்கம் அதிகமாகவுள்ள மற்ற நாடுகளுடன் இதனை ஒப்பிடலாம் இங்கு நல்ல துறைமுகமெதுவும் கிடையாது. குடாநாட்டின் பெரும்பகுதி மணலாகவும் உவர்நிலமாகவும் இருக்கிறது. சிறிய அளவு நிலமே விவசாயத்துக்கு ஏற்றதாக இருக்கிறது இங்கு இரு பெரிய தொழிற்சாலைகளும் சில சிறிய கைத்தொழில் நிலையங்களும் சமீப காலங்களில் ஆரம்பிக்கப்பட்டுநடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் தற்போது வாழ்ந்துவரும் வாழ்க்கைத்தரத்துக்கு வெளியூர் வருமானம் முக்கிய பங்கு கொண்டுள்ளது.

(15-ம் பக்கம் பார்க்க)

## மந்திரி பிலிப் குணவர்த்தனவின் சுவைமிக்க வரலாறு



இலங்கையில் மார்க்ஸீய இயக்கத்தின் தந்தையென்றும், இடதுசாரி இயக்கத்தின் ஸ்தாபகர் என்றும் கருதப்படும் திரு. பிலிப் குணவர்த்தனவின் வாழ்க்கை சென்ற 35 வருடங்களாக போராட்டங்கள் நிறைந்தனவாகவே இருந்துவந்துள்ளது.

சிங்கம்போன்று, கர்ஜனைத் தொனியுடன் மேடைகளில் முழங்கும் இவர் சாதாரணமாகப் பழகுவதில் மிகவும் நல்ல மனிதர்.

'புரட்சி இரட்டையர்கள்' என்று இலங்கை அரசியல்வானில் யாரும் கூறுவதைக் கேட்டால் அது பிலிப், ரொபர்ட் ஆகிய குணவர்த்தனக்கள் என்பதை எவரும் புரிந்துகொள்வர்.

பிலிப் மூத்த சகோதரர். ரொபர்ட் இளையவர். அரசியலை ஒன்ருகவும் ஒரு

(16-ம் பக்கம் பார்க்க)

**கைத்தொழில் அமைச்சர் அவர்களே!** கரங்கூப்பித் தங்களைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அழைக்கிறேம்.
தங்களின் சேவை என்றென்றும் எம்நாட்டிற்குத் தேவை.

**செய்தி தெரியுமா?** இல்லங்களை அழகில் ஆழ்த்துவது மெரிலாண்ட் அலங்காரப் பொருட்கள்!
இளம் உள்ளங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவது மெரிலாண்ட் நவ நாகரிக விளையாட்டுப்பொருட்கள்!!
எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவது மெரிலாண்ட் சுவீற் வகைகள்.
கைத்தறி சேலைகள்... 65 மொடல் சூட்கள்... சண்வைற் சோப்—இன்னும் பல பொருட்கள் தயாரிப்பவர்கள்.

மெரிலாண்ட் இன்டஸ்றீஸ்
153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 தொன் உப்பு தயாரிப்பதற்கான திட்டம்

## கல்லுண்டாயில் வலி. மேற்கு ப. நோ. கூட்டுறவு சமாசத்தின் பெருமுயற்சி

'உப்பில்லாக்கறி குப்பையிலே' என்ற முதுமொழியொன்று உண்டு. இது மனிதன் உண்ணும் உணவில் உப்பு எத்தனை முக்கியத்துவம் வகிக்கிறது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. மனிதர்களுக்கு இது எவ்வளவு தேவை என்பதனை உணர்ந்துள்ள வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தினர் இதன் உற்பத்திப் பெருக்கத்துக்கு பெருமுயற்சி எடுத்துள்ளார்கள். வெறும் இலாபத்தை நோக்காது பொதுமக்களும் பயனடையவேண்டுமென்ற கூட்டுறவு இயக்கத்தின் பெருநோக்கோடு அவர்கள் கல்லுண்டாயில் ஆரம்பித்திருக்கும் உப்பு உற்பத்தித் திட்டம் பெருவெற்றியை அளிக்காதுவிட்டாலும் வளர்ச்சியடைந்துள்ளது எனக்கூறலாம்.

யாழ்ப்பாணம்-காரைநகர் வீதியில் 3-ம் கட்டைக்கும் 5-ம் கட்டைக்குமிடையில், உப்பு இலாகாவினர் உப்பு உற்பத்திக்கு ஏற்ற இடம் என சிபார்சு செய்துள்ள இடத்தை உப்பு உற்பத்திக்கு தேர்ந்தெடுத்துள்ளார்கள் மேற்படி சமாசத்தினர். உப்பு இலாகாவின் உதவியுடனும் கூட்டுறவுகமிஷனரின் அனுமதியுடனும் சமாசத்தினர் 340 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடம் குத்தகைக்குப் பெற்று 1964-ம் வருடத்தில் உப்பு உற்பத்தி வேலையை ஆரம்பித்தனர்.

உப்பு கார்ப்பரேஷன் ஜெனரல் மனேஜர் ஆனையிறவு உப்பளத்தைப்போல் இத்திட்டமும் வெற்றிகரமாக இயங்கும் எனத் தமது கருத்தைத் தெரிவித்தார். கூட்டுறவு மாகாண வங்கியின் டைரக்டர்கள் சபை இதுபற்றி மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்தும் நேரில் பார்வையிட்டபின்னரும் இத்திட்டத்துக்கு நிதிஉதவி அளிக்க சம்மதம் தெரிவித்தது.

1964-ம் வருடம் மே மாதத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டபோது 75 ஏக்கர் நீர்த்தேக்கத்துக்கு ஒதுக்கப்பட்டது. 215 ஏக்கர் நீரைச் சேகரித்து வைப்பதற்கும் 30 ஏக்கர் உப்பு உறைவதற்கும் ஒதுக்கப்பட்டது. வருடத்துக்கு 10,000 தொன் உப்பு தயாரிக்கலாமென மதிப்பிடப்பட்டது.

1964-ம் வருடத்தில் சிறிதளவு உப்பாவது தயாரிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்த சமாசத்தினர் புல்டோசர்களை சேவையில் ஈடுபடுத்தினர். 15 ஏக்கரில் உப்புப்பாத்திகள் ஏற்படுத்தும் முயற்சி வெற்றியளித்தது. தற்போது உப்பு 136 பாத்திகளில் செய்யப்பட்டுள்ளன.

திட்டத்தின் முதலாவது கட்டம் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டம் இந்தவருட பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்தது. ஆனால் சீதோஷ்ண நிலை காரணமாக இது ஆரம்பிக்கமுடியாமற்போயிற்று. அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு இதுவரை ரூ. 579,450-87 செலவிடப்பட்டுள்ளது.

இந்தவருடம் 8000 அந்தர் உப்பு சேகரிக்கப்பட்டது. ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் கடும்மழை பெய்திருக்காவிடில் இன்னும் அதிகஅளவுஉப்பு பெற்றிருக்கலாம்,

காரியாலயம், ஸ்டோர் இவை கட்டுவதற்கும் சமாசத்தினர் பணம் செலவிட்டுள்ளனர். 19,000 ரூபா இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

## பதநீரைப் பனிக்கட்டியாக உறைய வைக்கலாம்

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன ஆராய்ச்சிப்பிரிவு. பதநீரை குறைந்த குளிர் நிலையில் உறைய வைத்தால், அதன் சுவையும், மணமும்மாறாது எனக்கண்டுபிடித்துள்ளது. பதநீரை உறையவைத்து, நீண்டநாட்கள் வரை கெடாமல் வைத்துக்கொள்ளலாம்.

பனிக் கட்டியாக்குவதால் பதநீரின்மணமும், சுவையும் அதிகரிக்கிறது. அதிகமாக உள்ள சுண்ணாம்புக்காரம் எரிப்பதில்லை. புத்தம் புதிய பதநீரைப் பருகுவதுபோல் சுவையாக உள்ளது.

## யாழ்ப்பாண மாவட்டத்தின்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகளைவிட கைத்தொழில் பேட்டையென்றால் என்னஎன்பதை நாம் அறிய வேண்டும். ஒரு கைத்தொழில் பேட்டையில்; கட்டடங்கள், தண்ணீர், மின்சாரம், தொழில் நுட்பம், நூல் நிலையம், நிர்வாக ஆபிஸ், போக்குவரத்து சாதனங்கள் பிறசகல வசதிகளும் இருக்க வேண்டும்

இக்கைத்தொழிற் பேட்டையை முதலீடுசெய்பவர் ஆரம்பித்து அதனை நடாத்துவதற்கு இந்தமுறை வழி வகுக்கின்றது. இப்படியான கைத்தொழில் பேட்டைகளை ஒரு கூட்டுறவு சங்க மூலம் ஸ்தாபிப்பது சிறந்ததாகும். ஒரு குழுவைச்சேர்ந்த 10 இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து தனித்தனி கைத்தொழிலுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கலாம்

ஒவ்வொரு 'இளைஞனும் ஆயிரம் ரூபா வீதம்போட்டு பத்தாயிரம் ரூபாவை முதலாக வைத்துக்கொண்டு, அரசாங்கத்திடமிருந்து 90,000 ரூபா கடன்பெறலாம். இதன் மூலம், கட்டடங்களுக்கும் மின்சாரவசதிகளுக்கும், தண்ணீர்வசதிக்கும் அவர்களின் முதலில் செலவிடாமலே ஒரு லட்சம் ரூபாவில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்படியான பத்துப் பேட்டைகள் இருக்குமானால் பேட்டைகளின் பெறுமதி ஒரு கோடியாகவும், இயந்திரங்களின் பெறுமதி இரண்டு கோடியாகவும் இருக்கும். வருடாந்த உற்பத்தியான 4 கோடி ரூபா அந்நியசெலாவணி மூலம் சேமிக்கலாம்.

பிற நாடுகளும் தவணை முறையில் பணம் செலுத்த வசதியாக, யந்திரங்களைத் தந்து உதவியளிக்கும். இதே சமயம் சிறு கைத்தொழிலதிபர்கள் யந்திரம் வாங்குவதற்கு கைத்தொழில் இலாகாவிடமிருந்தும், குடிசைக் கைத்தொழில் சபையிடமிருந்தும் கடன்பெறமுடியும். அவர்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கான முதலை வர்த்தக, கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் கடனைப் பெறமுடியும். அரசாங்கம் வரிச்சலுகைகளும், பணக் குறைப்பும் செய்வதோடு, ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுவரிகளையும் தளர்த்த வேண்டும்.

ஜாஎலைக்கு அருகேயுள்ள எகலாவில் அரசாங்கமே ஒரு கைத்தொழில் பேட்டையை ஆரம்பித்துள்ளது. அப்படியானால், தனிப்பட்டவர்கள் இப்படியான ஒரு கைத்தொழில் பேட்டையை முக்கியமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பித்து கைத்தொழில் அபிவிருத்தியை முன்னேற்றச்செய்வதற்கு தடை என்ன இருக்கிறது. பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கைத்தொழில் திட்டங்கள் எல்லாம் செயலளவில் சாத்தியமல்ல. செயலைப்பொறுத்தளவில் அநேக கஷ்டங்கள் எதிர்நோக்கியுள்ளன. இக்கஷ்டங்களை நீக்குவதற்கு அரசாங்கம் பேச்சளவில் மட்டும் இருக்காது, செயலிலும் காட்டுமென நம்புகிறோம்.

★ அஸ்பெஸ்டஸ் ★ அல்க்கத்தீன் பைப்

பராக்கிரமா ஓடுகள் | உயர்ந்த ரகம் | மலிந்த விலை

டபிள்கொயின் லொறி டயர் டியூப்புக்கள் (புதியன, பழையன)

அல்கன் பம் & உப-உறுப்புக்கள் விநியோகஸ்தர்கள்

விற்பனைக்குண்டு: 'பார்க்கர்' கொங்கிறீற் கலவை இயந்திரம்
மொடல் 5G 7/5 Cu-ft Capacity

அனைத்தும் தேவைக்கு உடன் பெற்றுக்கொள்ளலாம்

வலி. மேற்கு ப. நோ. கூ. சமாசம்

சங்கானை :::: (போன்: 525) :::: மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் துறையை நாடிய இளைஞரின் முயற்சி பெரு வெற்றியானது ! !

## யாழ் உலோகத் தொழிற்சாலை நிர்வாகி தமிழ் இளைஞருக்கு ஒரு முன்னோடி

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சந்தையில் போட்டிக்கு நிற்பதற்கு வேண்டிய முயற்சியும், தொழில் நுட்ப அறிவும், செயல்முறை அனுபவமும் அவசியம். தாராளமாக வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட காலத்தில் துணிந்து ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதென்றால், அதுவும் 24 வயது இளைஞர் ஒருவர் புதிய தொழில்துறையில் ஈடுபட்டாரென்றால் அது அவருக்கு தொழில் துறையில் இருந்த ஈடுபாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

**1957-ம்** ஆண்டில் வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதிக்கு தீவிர கட்டுப்பாடு கிடையாது. வெளிநாட்டிலிருந்து தேவையான பொருட்கள் தாரளமாக இறக்குமதி செய்யப்பட்ட காலமது. அப்பொழுது அலுமினியப் பொருட்களும் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டன. ஒரேயொரு அலுமினியத் தொழிற்சாலையே இலங்கையில் இயங்கிவந்த அக்காலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை நிறுவினால் நல்ல எதிர்காலம்உண்டெனவும்; பலருக்கு வேலைவாய்ப்பளிக்க வகைசெய்யும் எனவும் கண்டு யாழ். நகரின் மத்தியில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்பட்டது

### தொழிற்சாலை

யாழ். உலோகத் தொழிற்சாலையில் தற்போது 45 தொழிலாளர் வேலைசெய்கிறார்கள். கொழும்பில் உள்ள தொழில்நுட்பத் தொழிலாளர் பெறும் சம்பளத்துக்குச் சமமான சம்பளத்தைப் பெறும் இந்தத் தொழிலாளர்களின் தொழில் திறமையை அளவுகட்டமுடியாது. இவர்களுக்கு வருடா வருடம் ''போனஸ்'' நன்மையும் கிடைக்கிறது.

வெட்டப்பட்ட அலுமினியத்துண்டுகள் கடைச்சல் இயந்திரங்களின் பிடியில் சிக்கி, இந்திய, ஜப்பானிய தொழில் வல்லுனரிடம் பயிற்சிபெற்ற தொழில் நுட்ப உத்தியோகஸ்தரின் கைவண்ணத்தால் ஒரு சில நிமிட நேரத்தில் பாத்திர உருவத்தையெடுக்கின்றன. இங்கு உற்பத்தியாகும் அலுமினியப் பாத்திரங்கள் இப்பொழுது இலங்கை பூராவும் விற்பனையாவதுடன், உள்நாட்டில் உற்பத்தியாகும் மற்றும்அலுமினியபாத்திரங்களுடன் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு சந்தையில் முன்னணி இடத்தை வகிக்கின்றன. இலங்கையிலேயே இரண்டாவதாக நிறுவப்பட்ட இந்த அலுமினியத் தொழிற்சாலை எட்டுவருடங்களில் துரித முன்னேற்றமடைந்து விட்டதென்பதற்கு அதில் தயாராகும் அலுமினியப் பாத்திரங்கள் சான்றாகும்.

### உலோக உற்பத்திகள்

அலுமினிய பாத்திர உற்பத்தியை விட மற்றும் உலோகப் பாத்திரங்களும் இப்பொழுது இங்கு தயாராகின்றன. செம்பு என்னும் உலோகக்கூட்டினால் செய்யப்படும் குடங்கள், குத்து விளக்குகள், மற்றும் சமையல் பாத்திரங்கள், பரிசுப் பொருட்கள் ஆகியவையும் இங்கு தயாராக்கப்படுகின்றன. இந்தப்பகுதியிலும் சுமார் 50 பேர் வேலை செய்கிறார்கள். இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் இதேவகையைச் சார்ந்த பொருள்களுடன் போட்டிபோட்டுக் கொண்டு விற்பனையாகின்றன.

'எலக்ரோ-பிளேட்டிங்' வேலையும் இங்கு செய்யப்படுகிறது. மோட்டார் உதிரிப்பாகங்களுக்கும், மற்றும் பாத்திரவகைகளுக்கும் மின்சாரத்தால் உலோக முலாம் பூசப்படும். இந்தமுறையினால் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தப்படுகிறது. ஒருமுறை உலோக முலாம் பூசினால் ஐந்து வருடங்களுக்கு அந்தப்பொருட்களைப் பாவிக்கலாம். இதனால் புதிய உதிரிப்பாகங்களை வருவிப்பதில் செலவாகும் வெளிநாட்டுச் செலாவணி பெருந்தொகையில் மிச்சப்படுத்தப்படவும் இத்தொழிற்சாலை உதவி செய்கிறது.

அலுமினிய தொழிற்சாலையென ஆரம்பித்து அத்துடன் வேறு பல உலோக வார்ப்பு வேலைகளையும் இங்கு செய்கிறார்கள். எட்டு வருடங்களில் எவ்வளவு முன்னேற்றம்!

### மூலப்பொருள் தட்டுப்பாடு

மூலப்பொருள்களுக்கு முழுக்க முழுக்க வெளிநாட்டையே நம்பியிருப்பதால் ஒரு வருடத்தில் சில மாதங்களுக்கு வேலை தடைப்படுவதாகவும், கைத்தொழில் துறையில் இதுபெரும் சாபக்கேடாக இருப்பதாகவும் தொழிற்சாலை மனேஜர் பெரிதும் கவலையுடன் தெரிவித்தார். 3 லட்சம் ரூபா மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலைக்கு போதிய மூலப்பொருட்கள் கிடைத்தால் இன்னும் 100 பேருக்கு வேலை கொடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். முயற்சியுடன் திட்டமிட்டுச் செயலாற்றினால் யாழ்ப்பாணத்தில் பல தொழிற்சாலைகள் உருவெடுக்க வழியுண்டு என்பதற்கு யாழ். உலோகத் தொழிற்சாலையும் ஓர் உதாரணமாகும்.

அளவெட்டியைச் சேர்ந்த 32 வயதுடைய திரு. திருநாவுக்கரசு இந்தத் தொழிற்சாலையை தமது இளவயதில் நிறுவி திறம்பட நடத்திவருகின்றார்.

எட்டு வருடங்களுக்குள் மக்களின் மனப்போக்கில் தான் எவ்வளவு மாற்றம். நாற்காலி உத்தியோக ஆசை இப்பொழுது கூட தமிழர்களை விட்டுவிடவில்லை. ஆனால் எட்டுவருடங்களுக்கு முன்னரே நாற்காலி உத்தியோகத்தை நாடாது தொழில் துறையில் ஈடுபட்ட திரு. திருநாவுக்கரசுவை பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. எளிய சுபாவமுடைய அவர் தன்னைப்பற்றிய விபரம் எதையும் சொல்லமறுத்துவிட்டார். தமிழ்இளைஞர்கள் தொழில்துறையில் ஈடுபட இவர் ஒரு முன்னோடியாக விளங்குகிறார். இவரது முயற்சி மேலும் பயன் கொடுத்து யாழ். உலோகத் தொழிற்சாலை ஒரு பெரிய தொழிற்சாலையாக வளர வேண்டும். அவரது திறந்த சிந்தையினால் அது கைகூடும் என்பதில் ஐயமில்லை.

—கானம்


யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள
கௌரவ கைத்தொழில், கடற்தொழில் மந்திரி
திரு. பிலிப் குணவர்த்தன அவர்களுக்கு
எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து
மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்

உற்பத்தியாளர்கள் :
உத்தரவாதமுள்ள, உயர்ந்த ரகமான
"யாழ் மார்க்"
அலுமினியப் பாத்திரங்கள்

இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் :
பாவனைக்கு நீடித்து நிற்கும்
எவர்சில்வர் பாத்திரங்கள், போட்டிப் பரிசுக்
கிண்ணங்கள், அன்பளிப்புப் பாத்திரங்கள்

மின்சக்தி உதவியினால்
(உலோகங்கள்)
தங்கம், வெள்ளி,
நிக்கல், குரோமியம்
பூசிக்கொடுப்பதில் பிரபல்யம் வாய்ந்தவர்கள்

யாழ் உலோகத் தொழிற்சாலை
250—252, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி:- "யாழ்மெட்டல்" போன்:- 7049


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவையான விதவிதமான பொருள்கள்

## காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழிற்சாலையில் உருவாகின்றன

நெசவுத்தறிகள், இரும்புப்பெட்டிகள், காட்டுக் கத்திகள், பூட்டுக்கள், திறப்புக்கள், வீட்டுக்குத்தேவையான கதவுகள், யன்னல்கள், கிறில்கள், கட்டில்கள், அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், சமையலறைக்குத் தேவையான அரிவாள், துருவுபலகை, உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான குப்பைவண்டிகள் இவையெல்லாம் ஒரே தொழிற்சாலையில் தயாரிக்கப்படுவதாக இருந்தால் அந்த தொழிற்சாலை எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கும் என்று சொல்ல வேண்டுமா? நீர்வேலியில் உள்ள காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழிற்சாலையில்தான் ஆரவாரமின்றி அமைதியாக இப்பொருள்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழில் சங்கம் சுமார் பதின்மூன்று வருடங்களாக இயங்கி வருகிறது என்பதற்கு சங்கத்தினரால் தாயாரிக்கப்படும் நேர்த்தியான பொருள்கள் சாட்சி கூறுகின்றன. சங்கத்தின் அங்கத்தவர்களே ஊழியர்கள். அவர்களே நிர்வாகிகள். நமது ஊரில் இந்த முறையில் நிர்வாகம் நடைபெறும் தொழிற்சாலைகளில் நல்ல முன்மாதிரியாக இயங்குகிறது காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழில் நிலையம்.

சங்க அங்கத்தவர்கள் அதாவது ஊழியர்கள் நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாயிலிருந்து 15 ரூபா வரை சம்பாதித்துக் கொள்கிருர்கள். தமது உழைப்பு தமக்கே இலாபத்தைத் தேடித்தரும் என்றநம்பிக்கையில் இந்தத் தொழிற்சாலையிலுள்ள சுமார் 35 ஊழியர்கள் மிக்க அக்கறையோடு உழைக்கிருர்கள். இவ்விதமில்லாவிட்டால் குத்தகைக்காணியில் இயங்கிவந்த தொழிற்சாலைசொந்தக்காணிவாங்கிநிறுவ்சங்கத்துக்குச்சக்திபிறந்திருக்குமா? சில இயந்திரங்களைக்கூட தாமேஉருவாக்கும் திறன் படைத்தவர்கள் இங்குள்ள ஊழியர்கள் என்பதை இங்கு செல்பவர்கள் இலகுவில் அறிந்துகொள்ளலாம். போர்மன் திரு. ச. துரைச்சாமியின் மேற்பார்வையில் தயாரிப்பு செம்மை பெறுகிறது.

இங்கு உருவாக்கப்படும் பொருள்களை வாங்க விரும்புவோர் வேறுகடைகளுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. தொழிற்சாலைக்குப் பக்கத்தேயுள்ளவிற்பனை நிலையத்திலேயே விரும்பியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு பொருளைமொத்தமாக வாங்கும்பொழுது எந்த விலையில் வாங்கமுடிகிறதோ அதேவிலையில் சில்லறையாக வாங்கிக்கொள்ளலாம். இது வசதி குறைந்தவர்களுக்கு மிக்க ஆறுதல் அளிக்கிறது. கூட்டுறவின் நோக்கத்தை இத்தொழிற்சாலையை நடத்துபவர்கள் நன்கு உணர்ந்திருக்கிருர்கள் என்று கூறலாம்.

இந்த விற்பனை நிலைய மனேஜர் பொருள்களை விற்பனை செய்வதில் மட்டும் அக்கறை காட்டாது சங்க அங்கத்தவர்களும்பொதுமக்களும் பலனடைய உழைத்து வருகிருர் என்பதை அந்த விற்பனை நிலையத்துக்கு ஒருமுறை சென்று வந்த யாரும் ஒப்புக்கொள்வர். அத்துடன் மிக்க வல்லமையுமுள்ளவர் மனேஜர் திரு. வல்லிபுரம்.

இவ்விதம் சீராக, திறமையோடு இயங்கிவரும் இந்த தொழிற்சாலைக்கு இன்னும் சில உதவி அரசாங்கத்திடமிருந்து கிடைத்தால் பூரணத்துவமடையும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளார் மனேஜர்.

மண்வெட்டிகளை இந்தத் தொழிற்சாலையில் உயர்ந்த ரகத்தில் தயாரிக்க முடியுமாம். இவ்விதம் மண்வெட்டிகளைத் தயாரிக்க அரசாங்கம் இத்தொழிற்சாலைக்கு உதவ முன்வந்தால் இலங்கைக்குத்தேவையான மண்வெட்டிகளை இங்கேயே தயாரிக்கலாமாம். எவ்வளவு பணம் மிச்சம், எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு இதனுல் உண்டாகலாம்.

—கணேஷ்

சிந்தனையின் சிகரம் - கற்பனையின் கருவூலம்

**சகல சமய சமரசக் கலண்டர்**

(இரகுநாதையர் கணிதமும் 400 சித்திரங்களும் அடங்கியது)

**லீலா**

லீலா பஞ்சாங்க சித்திர கலண்டர்

லீலா பஞ்சாங்க டயறி (புதிய தயாரிப்பு)

லீலா டயறிகள்

**விரைவில் வெளிவரும்**

**பாவிப்பாள அன்பர்களே!**

உங்கள் தேவைகளுக்கு அருகாமையிலுள்ள வியாபாரிகளிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்

**வடமாகாண வியாபார அன்பர்களே!**

உங்கள் தேவைகட்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி (பெரியகடை)

**செ. ஆ. செ. அன் கோ**

அவர்களிடம் பதிவு செய்யுங்கள்.

நேரில் வேண்டியவர்கள்

**கொழும்பு லீலா ஸ்டோர்சில்**

ஆடர் செய்து விலைப்பட்டியலை எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சுகந்த நறுமணம் கமழும்

**"ஆர்எஸ்"**

யாழ் ஜெயந்தி ஜவ்வாது பத்தி

உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

**ஆ. இராசையா அன் சன்ஸ்**

69, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

**குறைந்த விலை! சிறந்த பொருட்கள்!!**

**நீடித்த பாவிப்பு**

**தீயினுலும், திருடராலும் பாதிக்க முடியாத**

இரும்புப் பெட்டிகள், சுருக்குக் கேற்றுகள், சாதாரண கேற் வகைகள், யன்னல் கிறில்கள், கதவுப் பூட்டுகள், பிணையல் வகைகள், திருங்கு வகைகள், மைய வண்டிகள், கக்கூஸ் வண்டிகள், சாதாரண வண்டிகள் மோட்டார் வண்டிகளுக்கேற்ற கரியர்கள், டிருக்டர் கொழுக்கள்

**மிகத்திறமையான உருக்கினுல் செய்யப்பெற்ற**

கத்திகள், கோடரிகள், காட்டுக் கத்திகள், சீவல் கத்திகள், மேசைக் கத்திகள், அரிவாள், திருவலைகள், புல்லுச் சத்தகங்கள், பன்னச் சத்தகங்கள், பாக்குவெட்டிகள், நிலை, யன்னல்கள், கதவுகள், அலுமாரி, மேசை, கதிரை, வாங்குகளும்

**இன்னும் பல பொருட்களும்**

தண்ணீர் பம்புகள், வண்டிகள், துவிச்சக்கரம், லொறி முதலியவற்றின் திருத்த வேலைகளும் கைதேர்ந்த நிபுணர்களால் திறமையாகச் செய்து குறித்த தவணையில் கொடுக்கப்படும்.

**காமாட்சியம்பாள் கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கம்**

**நீர்வேலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தயாரிக்கும் மில்க்வைற் சோப்

ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்குத் தொழிலகங்களும் பத்திரிகைகளும் இரு கண்கள். அதிலும் வானத்தை எதிர்நோக்கும் யாழ் நகரிலே கமவிருத்தி இயன்றகாரியமல்ல. தொழிற்சாலைகள்மூலம்பொருளாதாரம் பெருக வேண்டும். பத்திரிகைகள் அந்தத் தொழிற்சாலைகளின் வேலைகளைப்பாராட்டி மக்களுக்கு அறிமுகம் செய்தல்வேண்டும். தொழிற்சாலைகளுக்குக் குறைவற்ற இங்கிலாந்து போன்ற மேல்நாடுகளிலேயே பத்திரிகைகள்தொழிற்சாலைகளைப் பற்றி அறிமுகம்செய்யும்போது, மேல் நாட்டுப் பொருட்களிலே மோகங்கொண்டு பணத்தைதிணிக்கும் ஈழநாட்டவர்க்குத்தேசிய தொழிற்சாலைகளைப் பற்றிய அறிமுகம் மேலும் அவசியமாகிறது.

பத்திரிகைகளை ஆதரிப்பதிற் தொழிற்சாலைகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் பங்கெடுத்தலும், அவர்களைப்பற்றி மக்களுக்கு பிரசாரம்செய்வதில் பத்திரிகைபங்கெடுத்தலும் நகமும் சதையும்போலநீங்காத காரியங்களாக இருக்கின்றன.

பனுட்டிற்கு மேல்நாட்டிலே ஒரு மினுமினுப்பான மேலுறையிட்டு ''மேடின் இங்கிலன்ட்'' என்றொரு மொழி வடிவங்கொடுத்து இலங்கைக்கு வந்திறங்கினால் அதனைப்பற்றி ஆகா! என்ன பிரமாதம்? எவ்வளவு ''ரேஸ்ற்'', அசல் 'ரொவ்வி' என்று வாங்கிக் கொள்வதிலேயே பெருமைகொள்பவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் இருக்கும்வரை நாடு விழிப்படையாது என்று நினைக்கிறீர்களல்லவா? முற்றிலும் சரியே சரி. யாழ்ப்பாணத்தவர் ஆற்றலில் வல்லவர்கள்; ஆனால் சுகவழியாக சீவிப்பதிலும் அவர்களுக்குத் திறமையுண்டு. எங்கேயாவது சிலர் விதிவிலக்காக வெளிப்படுவர். அத்தகையோர் பகீரதப்பிரயத்தனம்செய்து முன்னுக்கு வந்தால் உண்டு அன்றேல்மற்றவர்கள்சொற்கேட்டு மனம் மடிந்தால் மடிந்தவர்கள் தான்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, தட்டார் தெருச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை செல்லும் வீதியில் நாற்பது யார் கழிந்ததும் மேற்குப்பக்கத்தில் ''மில்க்வைற்சோப் தொழிற்சாலை'' என்றொரு விளம்பரப்பலகை தோன்றும். அந்த விளம்பரத்துக்குப்பக்கத்தில் நேரே மேற்குநோக்கினால் தொழிற்சாலை அலுவலகம் தோன்றும். பக்கத்திலே தொழிற்சாலை; அமைதி நிலவத் தொழிலகத்திலே கண்ணும் கருத்துமாகச் சேவைசெய்பவர்களைக்காணலாம். ஆம், எம்மவர்எத்தனைபேர் அங்கு வேலைசெய்து பிழைக்கிறார்கள். இன்னும் தொழிற்சாலை வளரஎத்தனையோ பேருக்கு வேலை கிடைக்கவாய்ப்பிருக்கிறது. எங்கள் செல்வம் எங்கள் நாட்டிலேயே தங்கிவிடுகிறது.

சவர்க்காரத்திற்கு வேண்டிய மூலப்பொருள்களிலே பிரதானமானவைதேங்காய் நெய்யும், 'கோஸ்ரிக்' சோடாவுமே. தேக்காய் நெய் நம் நாட்டது. 'கோஸ்ரிக்'சோடாவுக்கும் தொழிற்சாலை கண்டுவிட்டோம்; அது கறி உப்பிலிருந்து தயாராவது. இவற்றைச் சவர்க்காரமாக்குவதுதானே தொழில்; இன்று இப்படி இலகுவாகச் சொல்லிவிடலாம். இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னாடி வாருங்கள்.

இப்போது மில்க்வைற் தொழிற்சாலைஇருக்கும் வளவிலே ஒரு வீடு. அதன் தலைவர் திரு. வீ. மு. கந்தையா பிள்ளை. இவருக்கு 1920-ம் ஆண்டிலே சவர்க்கார உற்பத்தித் தொழிலைப் பற்றிய திறமை இருந்திருந்தால் இரசாயன சாஸ்திரம் பயின்ற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவரது திறமையின் அளவுதெளிவாகும். திரு. கந்தையா பிள்ளை அவர்கள் தமது வீட்டு உபயோகத்திற்காகச் சவர்க்காரம் செய்து பயன்படுத்தினார். அயலவர்கள் அதனைக்கண்டு செய்துகொள்ள முயற்சிக்கவில்லை. இலவசமாக வாங்கிக் கொள்ள முயற்சித்தார்கள். இந்த இலவசமுயற்சி யாழ்ப்பாணத்தவருக்கு மிகவும் கைதேர்ந்த தொழில். பத்திரிகைகளையே இலவசமாக வாசிக்க, இயல்புள்ளவர்கள் கூட முன்னேறிவிட்டார்கள் என்றால் எப்படி நாடு உருப்படும்? இந்த இலவச விநியோகத்தைக் கந்தையாபிள்ளை அவர்களால் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் சவர்க்கார செய்கையை ஓர் உபதொழிலாகவும், குடிசைக் கைத்தொழிலாகவும் மாற்றினார். சூழஉள்ளவர்கள் விலைக்கு வாங்கிக்கொள்ள பழகிக் கொண்டார்கள் சிறிது வருவாய். பிள்ளையவர்களது எண்ணம்விரிந்தது. தொழில் வளர்ந்தது; வருவாயும் பெருகியது. படித்துக்கொண்டிருந்த தமது பிள்ளைகளுக்கும் தொழில் நுட்பங்களை தெளிவாக்கினார். அவர்களும் பஞ்சபாண்டவர்கள் போல ஐவர்! சவர்க்கார தொழிற்சாலை மேலோங்க ஐவர் போதுமே! சாலை உயர்ந்தது- சவர்க்காரம் சிறந்தது-வியாபாரமும் பெருகியது- அதன் புகழ் தீவெங்கிலும் பரவியது. இன்று 'மில்க்வைற்'சோப் தொழிற்சாலை நிர்வாகியாக பணிபுரியும் திரு. க. கனகராசா அவர்கள் பிள்ளையவர்களின் இரண்டாவது புதல்வர். இவர் மற்றவர்களது ஒத்துழைப்போடு மிகத்திறமையாகப்பணிபுரிகிறார். அறிவும் ஆற்றலும் வாய்ந்த புத்திரர்கள் கையில் தொழிற்சாலையைக் கொடுத்துவிட்டு, தம் ஓய்விலும் ஆலோசனைகள் உதவி, முழுத்திறமையையும் செறித்து விட்டு 11-4-59-ல் இவ்வுலகினின்றும் ஓய்வெடுத்துக் கொண்டார். ஆடை, உடல் அழுக்குகளைப்போக்கஒரு தொழிற்சாலையை நிறுவிய அவர், மன அழுக்கையும் வாழ்வில் மறந்து போகாமல் தமிழ் மறைகளாம் சவர்க்காரத்தால் போக்கிவந்தமை நாடறியும். இந்த அறிவு திரு. கனகராசா முதலாம் மக்களிடம் நிரம்பவுண்டு. தொழிலகத்தை பார்வையிடும்போது, அங்கே தொங்கும் சுலோகஅட்டைகளில் எல்லாம் ஞானக் கருத்துகளும் சுகாதார ஒழுங்குகளும் மிளிருகின்றன. தொழிற்சாலையை நடாத்துவது சுலபமாகலாம். ஆனால் பண்பும், ஆசாரமும் பங்குகொள்ளுதல் மிகவும்கடினம். தொழிலாளர்களை வதைத்து, மிதித்து, உழக்கிய அத்திவாரத்திலேயே பணக்கட்டிடம் கட்டி பாழ் நரகிற்கு ஆயத்தமாகும் தொழிற்சாலை அதிபர்களில் மில்க்வைற் சோப் தொழிற்சாலையினர் விதிவிலக்காக இருக்கிறார்கள். அதனைத்தொடருவார்கள்.

— ''ஆதவன்''




நத்தார் - புத்தாண்டை முன்னிட்டு

மலிவு விற்பனை

1-11-65 முதல்

நவீன வீட்டுதளபாடங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

பாஷன் பேணிஷிங் பலெஸ்

(தளபாட மாளிகை)

5-7, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.



கைத்தொழில், கடற்தொழில் மந்திரி

உயர்திரு. பிலிப் குணவர்த்தன அவர்களை

அன்புடன் வரவேற்கிறோம்

மில்க்வைற் நீல சோப்

தற்பொழுது

புதிய

ரசாயனப் பொருட்கள்

சேர்க்கப்பட்டு

பெரிய சைஸ் கட்டியாக

தயாரிக்கப்படுகின்றது

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்




மில்க்வைற் நீல சோப்

மேல் உறைகளைப்போல் டிசைன்களில் வேறு போலி சோப்புகள் விற்பனையாகிறபடியால், உங்கள் வாடிக்கைக் கடைகளில் நீல சோப் வாங்கும்போது தயவு செய்து உண்மையான மில்க்வைற் நீல சோப்தானா என்பதை கவனித்து வாங்க மறவாதீர்கள்!

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்!

ஒரு கட்டி மில்க்வைற் நீல சோப்

ஏராளமான துணிகளை அதிக வெண்மையாக்குகிறது

சிக்கன சலவைக்கு மில்க்வைற் நீல பார், வெள்ளை பார் சோப்புகளை

வாங்கி அதிக இலாபமடையுங்கள்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்


மில்க்வைற் சோப் தொழிற்சாலை

527, கே. கே. எஸ். ரோட், [ போன்: 7233 ] ::: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தேவைகளுக்கேற்ற சகல வாளிகளும் எங்கள் தொழிற்சாலையில் உற்பத்தியாகின்றன

## இலங்கை இளைஞர்களின் தொழில் திறமையை எடுத்துக்காட்டும் உன்னத தயாரிப்புகள்



## முழுக்க முழுக்க இலங்கையரின் கைவன்மையை எடுத்தியம்பும் வாளிகள்

**நீண்டகால பாவிப்புக்கு உத்தரவாதமளிக்கும் உறுதியான வேலைப்பாடு**

பார்வைக்கு அழகாகவும் பாவிப்புக்கு உறுதியானதுமான வாளிகள்

...ஆம் அவைதான்

## குதிரை மார்க் வாளிகள்

குதிரை மார்க் HORSE BRAND

**நீங்கள் இதுவரை குதிரைமார்க் வாளிகளை உபயோகிக்கவில்லையா?**

... அப்படியானால் இன்றே கேட்டு வாங்குங்கள் "குதிரை மார்க்" வாளிகள்

"எல்பிகெம்" தயாரிப்பான குதிரைமார்க் வாளிகள் நாடு பூராவும் விற்பனையாகின்றன.

எங்கள் மாவிட்டபுரம் தொழிற்சாலையில் மட்டுமே கல்வெக்ஷ் முறையில் விசேஷமாகத் தயாரிக்கப்படும் குதிரைமார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளால் செய்யப்படுகின்றன

தயாரிப்பாளர்கள்:

## எல்பிகெம் கவுஸ்

மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

| வடமாகாண விநியோகஸ்தர்:- | தலைமைக்காரியாலயம்:- | ஏனைய மாகாணங்களுக்கு:- |
|---|---|---|
| **தனலக்குமி ஸ்ரோர்ஸ்** | **எல்பிகெம் கவுஸ்** | **மஸ்கன்ஸ் லிமிட்டெட்** |
| தெல்லிப்பளை. | 101, [illegible] வீதி, கொழும்பு. | கொழும்பு - 12. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்திற்குள் ஓங்கி வளர்ந்த ‘எல்பிகெம்’ வாளித் தொழிற்சாலை

## வெளிநாட்டாரின் தொழில் நுட்ப ஆலோசனையின்றி திறம்பட இயங்குகிறது

கைத்தொழில் துறையில் உற்பத்தியின் குறியீட்டு உச்ச வரம்பை (Estimated Target Production), உற்பத்தி ஆரம்பமாகியதிலிருந்து ஏழே ஏழு மாதங்களில் எட்டிப் பிடித்துவிடுவதென்பது இலகுவான காரியமன்று. அதுவும் புதியதொரு கைத் தொழிலை, வெளிநாட்டார் எவரின் தொழில் நுட்ப ஆலோசனை எதுவுமின்றி, எமது இளைஞர்களுக்கு அந்தத்துறையில் பயிற்சி அளித்து, ஏழு மாதங்களில் குறியீட்டு உச்சவரம்பை எட்டிப்பிடிக்க முடிந்ததென்றால் அதை ஒரு சாதனை என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை. இந்தச் சாதனையை நிலைநாட்டி, வடமாகாணத்தில் கைத்தொழில் துறையில் வீறு நடைபோட்டுச் செல்லும் “எல்பிகெம்” வாளித்தொழிற்சாலை, தமிழர்கள் கைத்தொழில் துறையில் ஈடுபடுவதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது!

சென்ற வாரத்தில் ஒரு நாள், ‘தகதக’ வெயிலில் யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் வாளித்தொழிற்சாலையைப்பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன் நம்மில் மூவர் சென்றோம். மதிய போசனத்துக்கான இடைவேளை நேரமாதலால் தொழிற்சாலை எங்கும் ஒரே அமைதி. மதியபோசனம் அருந்திக்கொண்டிருந்த தொழிற்சாலை அதிபர் எங்களைக்கண்டதும் தமது உண்டியை அத்துடன் முடித்துக்கொண்டு ஓடோடி வந்து எங்களை வரவேற்று உபசரித்தார். அதிபர் தொடக்கம் தொழில் நுட்ப உத்தியோகத்தர்வரையானசகலவேலைகளையும் தானே கவனித்துக்கொண்டிருக்கும் அவர் எங்களைத் தொழிற்சாலைக்குள் அழைத்துச்சென்றார்.

நாங்கள் தொழிற்சாலையைப்பார்த்துவிட்டுப் போவதுடன் மட்டுமல்லாமல் பத்திரிகையில் அதுபற்றி எழுதப்போகிறோம் என்று எம்மில் ஒருவர் கூறியபோது, தமது தொழிற்சாலையின் வரலாற்றை ஆதியோடு அந்தமாக அவர் எடுத்துரைத்தார்.

உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க வேண்டும் என்ற ஒரேநோக்குடன்-பரந்த நோக்குடன் தனது பிறந்தகத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்ற 4 வருடங்களுக்குமுந்தியஅவருடையஎண்ணக்கரு இப்பொழுது, இடைவிடாத முயற்சியால் தொழிற்சாலையாக உருவெடுத்து வளர்ந்துவரும் சந்தோஷம் அவர் முகத்தில் தெரிந்தது. ஒரு தொழிற்சாலையின் உரிமையான நிர்வாகி என்றபதவியின் பொருட்டு ஏற்படும் பெருமையை அவரிடம் கண்டுபிடித்துவிடலாமா என்ற எங்கள் ஆராய்ச்சி தோல்வி கண்டது. ஆனால் ‘75-க்கு மேற்பட்ட வடமாகாண இளைஞர்களுக்கு இந்தத் துறையில் பயிற்சி அளித்துவேலைவாய்ப்புஅளித்திருக்கிறேன்’ என்பதை மட்டும் அவர்வெகுபெருமையுடன் கூறிக்கொண்டார்.

1962-ம் ஆண்டளவில் தொழிற்சாலைக்கான கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் பூர்த்தியானதாம். குத்தகைக்காணியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கட்டடம் 75,000 ரூபா செலவில் கட்டப்பட்டதாகும். இயந்திரசாதனங்களில் 75,000 ரூபா முதலீடு செய்யப்பட்டது. தொழிற்சாலையின் ஆரம்ப முதலீடான 2 லட்சம் ரூபா தொகைக்குள் திருப்திகரமாகத் திட்டமிட்டுச் செலவுசெய்யப்பட்டுள்ளது. முக்கிய மூலப்பொருளான இரும்பும் உபமூலப்பொருட்களும் வெளிநாடுகளிலிருந்தேஇறக்குமதி செய்யப்படுகிறது. முழுக்க முழுக்க வடமாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்களே இங்கு தொழில்புரிகின்றனர் என்பதைக்கேட்க பெரும் சந்தோஷமாகவிருந்தது.

1964-ம் ஆண்டு அக்டோபர் 26-ந்திகதி தொழிற்சாலையில் வேலைகள் ஆரம்பமாகின. ஆனால் 1965 ஜனவரி வரையில் உற்பத்தியான வாளி எதுவும் உற்பத்தியாகவில்லையாம். இளைஞர்களின்தொழிற்பயிற்சிக்காலம் அது. வாக்கர் அன்ட் கிறீக் போன்ற ஸ்தாபனங்களில் போர்மனாகக் கடமையாற்றிய அனுபவத்துடன், வெளிநாடு சென்று வாளியுற்பத்தியில் உள்ள தொழில் நுட்பங்களைக் கற்றதன் மூலம் கிடைத்த அறிவைக் கொண்டு இரண்டு மாதங்களில் 75 இளைஞர்களைப் பயிற்றுவித்தார் தொழிற்சாலை அதிபர் திரு. சின்னத்தம்பி. இந்த இரண்டு மாத காலத்திலும் சுமார் 50,000 ரூபா பெறுமதியான மூலப் பொருட்கள் பயனற்றவையாகினவாம். இளைஞர்கள் யாவர்க்கும்இரண்டு மாதத்தில் தொழில்முறைகைவரப் பெற்றவுடன் 1965 ஜனவரியில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதாம். சென்ற ஜூலை மாதத்தில் குறியீட்டு உச்சவரம்பை (நாளொன்றுக்கு சராசரி 35 டசின் வாளிகள்) நிலைநாட்டினர். இப்பொழுது நாளொன்றுக்கு சராசரி 40 டசின் வாளிகள் உற்பத்திசெய்யப்படுவதாகவும்மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் திரு. சின்னத்தம்பி.

தெல்லிப்பளையில் உள்ள நற்குடியிற்பிறந்த திரு. அ. சின்னத்தம்பி தமது 22-வது வயதிலேயே அங்கிருந்து சென்று சமீப காலம்வரை வெளியூரிலேயே வசித்து வந்தார். தனியார் ஸ்தாபனங்களில் கடமையாற்றிய இவர் தொப்பி தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்து நடத்திவந்தார். அவரது விடாமுயற்சியால் அந்த ஸ்தாபனம் இப்பொழுது இலங்கையிலே முதன்மைபெற்ற தொப்பித் தொழிற்சாலையாக விளங்குகிறது. ‘‘லங்கா பிரிட்டிஷ் காட்ற் மாட்’’ என்ற அந்த ஸ்தாபனத்தை இப்பொழுது அவரது இரண்டாவது புத்திரரான திரு. சி. வரதராசா நிர்வகித்து வருகிறார். தமது சிரேஷ்ட புத்திரரான வழக்கறிஞர் திரு. [illegible] கிருஷ்ணராசா [illegible] புதியதொழில் நிர்வாகத்தில் கொழும்பிலிருந்த வண்ணமே உதவி புரிந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தம்மைப்பற்றிய விபரங்களை வெளிப்படுத்த விரும்பாத திரு. சின்னத்தம்பி எமது வற்புறுத்தலின்பேரில் தமது தொழில்துறைபற்றிய அனுபவங்களைப் பெரிதும் கஷ்டப்பட்டே கூறினார். தம்மைப்பற்றிய சுய விளம்பரம் தேவையில்லையென்று வலியுறுத்திய அவரது தொழில்துறை வரலாறு மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்கும் என்பதற்காகவே இவற்றை இங்கு எழுதுகிறோம். திரு. சின்னத்தம்பி தனியார் ஸ்தாபனம் ஒன்றிலிருந்து ராஜினாமாச் செய்தபோது அவரது மனைவி உட்பட உறவினர் சகலரும் எதிர்த்தார்களென்றும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உத்தியோக ஆசையும், அதற்கு மட்டும் மதிப்புக்கொடுக்கும் தன்மையும் மறைந்துபோக பலகாலம் செல்லும் என்றும் அத்தருணத்தில் சரியாக சொன்னார். தன்னடக்கமும் டாம்பீகமற்ற மனப்போக்கும்,

**— ம. வ. கா —**

எளிய சுபாவமும் பொருந்திய அவரின் விடாமுயற்சியின் சிகரமாக ஓங்கி நிற்கிறது வாளித்தொழிற்சாலை. ‘‘எமது இளைஞர்களுக்கு தக்க பயிற்சி அளித்தால் அவர்கள் எந்த தொழில் நுட்பத்தையும் இலகுவில் கற்றுவிடுவார்கள்’’ என பல முறை கூறிக்கொண்டார். வெளிநாட்டு தொழில்நுட்ப ஆலோசகரோ அன்றி நிபுணரோ இன்றி முழுக்க முழுக்க எமது இளைஞர்களே தமது தொழிற்சாலையில் கடமையாற்றுவதையும் அவர் பெருமையுடன் கூறிக்கொண்டார். தொழில்துறையில் இவருக்கு இருந்த ஈடுபாட்டினாலும், விடாமுயற்சியாலும் அவர் தமது தேச இளைஞர்கள் 75 [illegible] ளார். மாவிட்டபுரக் கந்தன் ஆலயத்துக்கு அருகாமையில் தொழிற்சாலை மட்டும் அமைந்ததுமட்டுமல்லாமல் திரு. சின்னத்தம்பியின் மனமும் அந்தக்கந்தன் திருவடிக்கு அருகிலேயே ஒடுங்கிவிட்டதால்தான் இந்தப் புதிய தொழிற்சாலை ஒரு வருடத்திற்குள் ‘மளமள’ வென வளர்ச்சியுற்றதோ!

நிலஅளவைப் பகுதியில் படவரைஞராக 15 ஆண்டுகளும், கல்லோயா அபிவிருத்திசபையில் பிரதம படவரைஞராகவும் கடமையாற்றிய பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த மாதனையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. வ. சதாசிவம் தொழிற்சாலையின் தொழில் முகாமையாளராக கடமையாற்றுகிறார். திரு. சின்னத்தம்பியின் வலது கையாக இருந்து தொழிற்சாலையைத் திறம்பட நடத்தும் பெருமை அவரைச் சார்ந்ததாகும்.

புதிய இயந்திரங்கள் பலவற்றை வெளிநாட்டிலிருந்து வருவிக்கவிருப்பதாகவும் அவை வந்து சேர்ந்ததும் குழந்தைகள் குளிக்கும் தொட்டி (Baby’s bathing basin) போன்ற மற்றும் பொருட்களைத் தயாரிக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மூலப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கஷ்டமும், இவற்றை கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவருவது மட்டுமல்லாமல் கழிவுப்பொருட்களையும் விற்பனை செய்ய கொழும்புக்கு ஏற்றவேண்டிய கஷ்டமும் இருக்கிறதாம்.

இரும்புத் தகடுகள் பல தொழிலாளர்களின் கைவண்ணத்தினாலும், இயந்திரங்களின் உதவியுடனும் சில நிமிஷ நேரத்தில் வாளியாக உருவெடுத்து உலையில் வெந்து, கல்வெக்ஸ் செய்யப்பட்டு பளபளத்து கண்ணைப் பறிக்கின்றன! தகடு வெட்டப்பட்டு, பின்னர் இரண்டுபாதிகள் பொருத்தப்பட்டு அவை இயந்திரத்தில் வளைக்கப்பட்டு கிடைபக்கம் பொருத்தப்பட்டு-என்றுபலசெய்கை முறைகள் படிப்படியாக நடந்தேறி கடைசியில் கல்வெக்ஸ் தொட்டியை வந்து சேர்ந்து பிறகு மின்சார உலையில் காய்கிறது. இவ்வளவுக்குள்ளும்காதைப் பிளக்கும் உலோகச் சபதம்! கல்வெக்ஸ் முறையை இலங்கையில் ‘‘எல்பிகெம்’’ஸ்தாபனம் மட்டுமே செய்கிறதாம். பாவிப்புக்கு உறுதியும், பார்வைக்கு அழகாகவும் காட்சிதரும் இந்தவாளிகள் எமது இளைஞர்களின் கைவண்ணமே என்று எண்ணும்போது மனம் குளிர்கிறது. இலங்கை பூராவும் உள்ள மக்கள் இவற்றை உபயோகிக்கிறார்கள் என்பதைக்கேட்டதும் மேலும் மகிழ்ச்சி.

வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவியின்றி, சுதேச கைத்தொழில் வன்மையை எடுத்தியம்பும் உறுதியான ‘குதிரை மார்க்’ வாளித் தொழிற்சாலையைப்பார்த்து விட்டோம் என்ற பெருமிதத்துடன் காரில் ஏறும் போது ‘‘தொழிற்சாலையைப்பற்றி எதுவும் எழுதுங்கள், என்னைப்பற்றி எதுவும் எழுதாதீர்கள்’’ என்று கூறி விடைகொடுத்தார் அதிபர் சின்னத்தம்பி.

நல்லமுறையில் திட்டமிட்டு, உரியமுறையில் செயல்படுத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல தொழிற்சாலைகளை நிறுவி, பல இளைஞருக்கு வேலை வாய்ப்பளித்து, பொருளாதாரத்தைப் பெருக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு தனி மனிதர் ஒருவரின் முயற்சியின் பயனாய் எழுந்துள்ள ‘‘எல்பிகெம் கவுஸ்’’

## பஞ்சம் ஒழிய!

இறைவன் படைத்த நிலம் பெரிது. மண் உண்டு. மனம் வேண்டும். ‘என் நிலம், உன் நிலம்’ என்று வரப்புக் கட்டியதால் வளம் குறைந்தது. வாடுகின்றோம். இந் நிலை மாற பாரதியார் ஆணித்தரமாக வழியொன்றைக் கூறுகின்றார்.

‘‘வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதரெல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!— பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்’’ என்ற

அவர் கருத்தைச் செயலாக்கினால் பஞ்சமும் பட்டினியும் பறந்துவிடாதா? இதைத்தான் காந்தியடிகள் கூறினார். அறமுனிவர் விநோபா கால் நடையாய் நாடெல்லாம் சுற்றி இக் கருத்தினைச் செயலாக்க முயல்வதைப் பார்க்கின்றோம்.


## தனித்து செழிக்காது

அரசாங்கத் துறையும் தனியார் துறையும் ஒன்றின் உதவியின்றி மற்றொன்று இயங்கவோ செழிக்கவோ முடியாது. நாடுகளிடையே ஒத்துழைப்பு வெகுவாகப் பெருகிவரும் இந் நாளில் தொழில்துறையில்கூட்டுறவு அவசியம்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE-DOLLAR
DOLLAR BRAND




அலுமினியம் பித்தளை எவர்சில்வர்

தொழிற்சாலை -:- மாவிட்டபுரம்.

# 'டொலர்'





ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் விரும்பி பாவிக்கும் அலுமினியப்பாத்திரங்கள்

## மாவிட்டபுரத்தில் தயாராகும் விந்தை

மிகக் குறுகிய காலஎல்லைக்குள் அலுமினியப்பாத்திரங்களின் பாவனை வீடுகளில் பெரிதும் பரவியிருக்கிறது. இதேபோல், கட்டடங்கள், பாலங்கள், விமானங்கள், வாகனங்கள், மூலாம் பூசிய ஆபரணங்கள், வண்ணப் பூச்சுகள், வாண வெடிப் பெட்டிகள், டப்பாக்கள், உறைகள், ரசாயன வைத்தியக் கருவிகள் போன்றவற்றைப்பொருட்கள் செய்ய உதவும் அலுமினியத் தகடு, கம்பி, கழி, குழாய், தூள், தகட்டுச் சுருள் (Foil) முதலியவற்றின் உபயோகமும் குறிப்பிடத்தக்கவகையில் உயர்ந்திருக்கிறது.

பல்லாயிரமாண்டுகளாக மனிதர் மட்பாண்டங்களையே விரும்பி வீட்டில் உபயோகித்தனர். சென்ற சில நூற்றாண்டுகளாகச்செம்பாலும், பித்தளையாலும் செய்யப்பட்ட பாத்திரங்களையும் பாவித்தனர். ஆனால் 20-ம் நூற்றாண்டில் இவற்றின் இடத்தை அலுமினியப் பாத்திரங்கள் கைப்பற்றின. வேறு துறைகளிலும் இவ்விசித்திர உலோகங்களின் உபயோகமும் அவசியமும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

முதன்முதலாக 1920-ம் ஆண்டளவில்தான் அலுமினியப் பாத்திரங்கள் இலங்கையில் காணப்பட்டன. ஏனைய உலோகங்களிலும் அலுமினியமே சிறந்தது என்பது சில வருடங்களில் நிரூபிக்கப்பட்டது. 2-வது மகாயுத்தத்தின் பின் இதன் பாவனை பன்மடங்கு அதிகரித்தது. தற்பொழுது ஏழைகள் முதல் பணக்காரர்வரை எல்லோரும் அலுமினியப் பாத்திரங்களையே வீடுகளில் உபயோகிக்கின்றனர். எனவே இன்னும் சிலகாலத்தில் மட்பாண்டங்கள் கண்காட்சிப் பொருட்களாக மாறினாலும் வியப்பில்லை.

அலுமினியத்தின் செல்வாக்கிற்குக் காரணங்கள் பல உள. அலுமினியப் பாத்திரங்கள் மின்சார யந்திரங்களால், நவீன முறையில் மொத்தமாகச் செய்யப்படுவதால் உற்பத்திவிலை குறைவாக இருக்கிறது. மலிவான விலை ஒரு பெரும் கவர்ச்சியாகும். கையால் செய்யப்படும் மட்பாண்டங்களோ விலைவாசிகள் உயர உயர விலையேறுகின்றன. அத்துடன் வாங்கியவுடன் கீழே விழுந்து உடையவும் கூடும். இதனால் முடிவில் அலுமினியப்பாத்திரங்கள் மட்பாண்டங்களைவிட நூறு மடங்கு மலிவானவை என்று கூறல் மிகையாகாது.

செம்பு, பித்தளைப் பாத்திரங்கள், செழும்பூறித் தேகசௌக்கியத்திற்குக் கெடுதல் விளைவிக்கும். மேலும் அவை பாரமாகவும், சுத்தம்செய்யக் கஷ்டமாகவும் இருக்கின்றன. அலுமினியத்தையோ புளிப்பதார்த்தங்கள் தாக்குவதில்லை. அலுமினியம் பாரம் குறைவான உலோகமாதலால் கையாளவும் இலகுவாகவும் இருக்கிறது. மேலும், மினுமினுப்பாகவும், அழகாகவும், உறுதியாகவும், சுத்தம்செய்ய எளிதாகவும் இருக்கிறது. அலுமினியம் சீக்கிரம் சூடுபிடிப்பதால் எப்பொருளும் குறைவாகவே செலவாகிறது. பொலிஷ் செய்யப்பட்ட அலுமினியம் வெள்ளியைப் பார்க்கிலும் பார்வைக்கு நன்றாக இருக்கிறது.

இக்காரணங்களால் வைத்தியசாலைகளிலும், சிற்றுண்டிச்சாலைகளிலும், கப்பற்படை, காலாட்படை ஆகியவற்றின் தேவைகட்கும், தொழிற்சாலைகளிலும், அலுமினியப் பொருட்களே போற்றப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன.

வீடுகளில் அலுமினியப் பாத்திரங்கள் அத்தியாவசியமாக இருப்பதுபோலவே வேறுதுறைகளில் அலுமினியப் பொருட்களும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. இதனால் முன்னேறிவரும் நாடுகளில் இவ்வுலோகமும் அதன் பொருட்களும், உற்பத்தி செய்யப்படுவது அவசியம்.

மக்களோடு உடன் தோன்றியதுபோன்று பழைமை வாய்ந்து கோடிக்கணக்கான ஆண்டுகளாய் வழங்கி வந்த மட்பாண்டத்தையும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வழங்கிவந்த செம்பு, பித்தளைப் பாத்திரங்களையும், சில ஆண்டுகளில்ஒதுக்கி வென்ற விசித்திரம் பெற்றவை அலுமினியப் பாத்திரங்கள். கோயிற் பொங்கல், புதுவருடப்பொங்கல், தைப்பொங்கல், புதுமணப் பொங்கல் முதலிய நற்காரியங்களிலெல்லாம் மட்பானையின் இடத்தை அலுமினியப் பானை கவர்ந்து விட்டது. இதேபோல், கட்டடங்கள், கப்பல்கள், பாலங்கள், மின்சாரக் கம்பிகள் மற்றும் இரும்பு, செம்பு முதலியவைகளிடத்தில் அலுமினியம் நுழையத் தொடங்கி விட்டது. வானவெளிப் பிரயாணமோ அலுமினியமின்றி சாத்தியமாகாது.

இவ்வளவு கம்பீரமான அலுமினியத்திலிருந்து பாத்திரம் முதலியன செய்யும் கைத்தொழில்கள் எத்தகைய முன்னேற்றமான நாட்டிலுமுண்டு.

நமதுஈழநாட்டிலும், அதிலும் தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவி அலுமினியப் பாத்திரங்களை உற்பத்திசெய்ய முன்வந்த பெருமை அலுமினியம் இன்டஸ்றீஸ் (சிலோன்) லிமிட்டெட் என்னும் தனித் தமிழ்க்கம்பனிக்கே உரியது. மூலதனம்முழுவதும், தொழிலாளர்கள் எல்லோரும் ஈழத் தமிழ்நாட்டின் சொந்தம்.

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம்—கீரிமலை வீதிச் சந்திக்கணித்தாய், சீமெந்துத் தொழிற்சாலைக்கண்மையில், ஒரு ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் தொழிற்சாலை அமைந்துள்ளது. மின்சாரத்தியக்கப்படும் நவீன யந்திரங்கள் தினமும் இங்கு வேலை செய்கின்றன. பிரதி தினமும் அரைத்தொன் நிறைக்குக் குறையாத பாத்திரங்கள் செய்யப்பட்டு வெளியேறி உடனேவிற்பனையாகின்றன.



ஆ. தி. சம்பந்தர்

தூய்மையான உயர்ந்தரக அலுமினியத்திலிருந்தே இங்கு பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு பாத்திரத்திலும் ''டொலர்'' முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். அமெரிக்கன் பவுணிலுள்ள கழுகு அடையாளத்தைச் சூழ அலுமினியம் இன்டஸ்றீஸ் (சிலோன்)லிமிட்டெட் என்று காணப்படும். கண்ணைக் கொள்ளை கொள்ளும் வனப்பு, பளிச்சிடும்மினுக்கு, எந்த நாட்டுப் பொருள்களுக்கும் இணையான அமைப்பு, நீண்ட உழைப்பு. இவைபோதாதென்று விலையிலும் எந்நாட்டுப் பொருளோடும் எதிர்த்து நிற்கும் உன்னதம், நம் தாய்நாட்டு அலுமினியப் பாத்திரத்துக்குண்டு.

இன்றுவரை இங்கிலாந்து, இந்தியா, யப்பான், ஹொங்கொங், ஹங்கேரி முதலிய நாடுகளிலிருந்து வந்த அலுமினியப்பாத்திரங்கள் இனி வராமையினால் பிறநாட்டுச் செலாவணிக்கு இலாபம். கோடிக்கணக்காய்அனுப்பப்பட்டுவந்த பணம் இலங்கைக்குள்தங்கிச் செழிக்கும். இப்போது பல தொழிலாளருக்கு வேலைஉதவி, பல குடும்பங்களுக்கு உணவுண்ண வழிசெய்யும் இத்தொழில் விரைவில் இருமடங்கு மும்மடங்கு ஆட்களுக்கு உதவும். இதைவிட இப்பாத்திரங்களை வாங்கி விற்றுப் பிழைப்பவர் ஆயிரக்கணக்கினர்.

டொலர் பாத்திரங்கள் இலங்கையில் எந்தப் பாகத்திலும் நுழையாத கடையும் நுழையாதவீடும்இல்லை, ஆதலால்பலபாகங்களிலுள்ள பணம் இத்தொழிலில் தங்கியுள்ளோருக்கு உதவுகிறது.

அலுமினியம் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தினர் இத்துறையில் மேலும் விஸ்தரிப்பதற்கான பலதிட்டங்களை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். அலுமினியப் பாத்திரங்கள் செய்வதைத்தொடர்ந்து பித்தளைப் பாத்திரங்களும் வேறு பொருட்களும் செய்வதற்கான திட்டங்களை இந்த ஸ்தாபனத்தினர் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கை முழுவதற்கும் அலுமினியப் பாத்திரங்கள் விநியோகம் செய்யக்கூடிய வசதிகள் தற்பொழுதுதொழிற்சாலையில் உண்டு. மின்னல் வேகத்தில் அலுமினியப்பாத்திரங்களைச் செய்யும் நவீன இயந்திர சாதனங்களும் தற்பொழுது தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளன.

''டொலர்'' என்ற முத்திரை பதித்த இந்த உற்பத்திப் பொருட்கள், அழகு, உறுதி, மினுமினுப்பு ஆகியவற்றில் வேறெந்த நாட்டுப்பொருளுக்கும் குறைந்ததல்ல. அத்துடன் இந்த நாட்டிலுள்ள கைத்தொழிலில் ஈடுபட்ட அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது. இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியைக்கண்டு வேறு சில ஸ்தாபனங்களும் தோன்றியது குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சாலையில் பணியாற்றும் சகல ஊழியர்களும் இக்கிராமத்தில் உள்ள அயலூர் வாசிகள். இதனால் உள்ளூரில் வேலை பார்க்கும் வாய்ப்பு பலருக்குக் கிடைத்துள்ளது. பொருளாதார வசதிகள் உள்ளவர்கள் தொழிற்சாலைகளை நிறுவும்பொழுதுஎங்கே ஒரு தொழிற்சாலை நிறுவப்படல்வேண்டுமென்று முடிவு செய்கின்றனர். அலுமினியம் இன்டஸ்றீஸ் நிர்வாகியான திரு ஆ. த. சம்பந்தர் மாவிட்டபுரத்தில் இத்தொழிற்சாலையை நிறுவும் பொழுது பல காரணங்களைக் கொண்டே இத்தொழிற்சாலையை அங்கு ஸ்தாபித்தார்.

இதனால் அத்தொழிற்சாலையில் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் சந்தர்ப்பத்தை நல்கியுள்ளார். இது போன்று வேறு தொழிற்சாலைகளும் யாழ். மாவட்டத்தில் நிறுவப்பட்டால் பொருளாதார அபிவிருத்தியும் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களும் ஏற்பட இடம் உண்டு.

தொழிற்சாலை வெளித்தோற்றம், எளியதோற்றமாயிருந்தபோதிலும், நாம் தொழிற்சாலைக்குள்ளே புகுந்து இயந்திர சாதனங்களையும், தொழில் நுட்பங்களையும், தொழில் துரிதத்தையும், மின்னல் வேகத்தில் ஆயிரமாயிரம் பளபளப்பான பாத்திரங்கள் வெளிவருவதையும் பார்த்தால் அது யாரையும் பிரமிக்க வைப்பதுடன்கைத்தொழில் ஆர்வத்தையும், தேசியபெருமிதத்தையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கைத்தொழில் மூலம் நாடு முன்னேற்றமடையும் என்பதற்கு அதன் உற்பத்திப் பொருள்கள் வழிகாட்டியாகவிருக்கின்றன. இத்தொழிற்சாலை தமிழ்ப்பிரதேசத்தில் சந்தேகமின்றி முதலிடம் வகிக்கின்றது என்று கூடக் குறிப்பிடலாம்.

இத்தொழிற்சாலைஇன்னும் எத்தனையோ சாதனைகளைச் சாதிக்கும்என்பதற்கு அதன் உற்பத்தியும், தரமும் எடுத்துக்காட்டு. பொருளாதார எதிர்காலம் எப்படியாகுமோ என்று கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் எண்ணிக்கொண்டிருக்கும் இந்நாளில் கைத்தொழில்துறையில் சிறந்தநம்பிக்கையுண்டு என்று அலுமினியம் இன்டஸ்றீஸார் எடுத்துக்காட்டுகின்றனர்.

எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பதும், பொருளாதாரத்துக்கு அரசாங்க உத்தியோகமின்றேல்வாழ்வில்லையென்று கையேந்தி நிற்பதுமாகிய நம்நாட்டில் கைத்தொழில் செய்யலாம், முன்னேறலாம், பொருள் தேடலாம் என்று வழியும் ஒளியும் காட்டும் தமிழ்நாட்டுத் தலைமைப்பீடம் வகிக்குமிக்கைத் தொழிலைப் பின்பற்றி மற்றைய மக்களும் வெவ்வேறு தொழில்கள் தொடங்கி அடிமைவாழ்வை உதறி வீரவாழ்வு வாழ்வோமாக.

அழகு, உறுதி, மினுமினுப்பு ஆகியவற்றில் வேறெந்த நாட்டுப் பொருளுக்கும் குறைந்ததல்ல என்று எடுத்தியம்புகின்றன“டொலர்” அலுமினியப் பாத்திரங்கள். இலங்கையில் முதல் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட அலுமினிய தொழிற்சாலை டொலர் கார்ப்பரேசன் தொழிற்சாலையாகும். இலங்கை முழுவதற்கும் அலுமினியப் பாத்திரங்கள் விநியோகிக்கும் இத்தொழிற்சாலை தனித் தமிழ் கம்பனியின் நிர்வாகமே. மூலதனம் முழுவதும், தொழிலாளர் எல்லோரும் ஈழத் தமிழ் நாட்டின் சொந்தம்.

## உழைப்பாளிகள் தேவை

தொழில் வளம் பெருகி வரும் இந்தக்காலத்தில் அத்தாட்சிகளும் பட்டங்களும் பெற்ற பொறி இயல்வல்லுனர்கள் மட்டும் பெருகிவிட்டால் போதாது. தொழிற்சாலைகளில் உழைக்கும் ஊழியர்களும் பொறி இயல் நுட்ப அறிவும் பொது அறிவும் பெற்று விளங்கவேண்டியது அவசியம். கொல்லத்து வேலையும், தச்சு வேலையும், உருக்குதல், காய்ச்சுதல், தட்டுதல், வெட்டுதல் போன்ற அடிப்படை அலுவல்களையும் கூட முறையாகவும் விஞ்ஞான ரீதியாகவும் பயின்றுள்ள உழைப்பாளிகளின் தேவை பெரிதும் அதிகரித்துவிட்டது. எனவே அடிப்படை உழைப்பாளிகளை முறையானபயிற்சியும், பொறி இயல் அறிவும் கொடுத்துத் தயாரிக்க வேண்டியது அவசியம்.

— 'சிவாஜி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம்**

# அத்தியடியிலிருந்து மாலைதீவுக்கு ரப்பர் பொருள் ஏற்றுமதி

## ஜெனரல் இன்டஸ்றீஸ் சாதனை

யாழ்ப்பாணத்திலுள்ள அத்தியடியிலிருந்து மாலைதீவுக்கு ரப்பர் பொருள்கள் ஏற்றுமதியாகிறதென்றால் பலருக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். சந்தேகமும் எழலாம். ஆனால் உண்மைதான். நமக்குத் தெரியாத, நாம் அறியாத கைத்தொழில்கள் நம் நாட்டில் பல. நல்ல நவீன கைத்தொழில்கள் உருவாகி இயங்கிவருகின்றன. அத்தியடியிலுள்ள 'ஜெனரல் இன்டஸ்றீஸ்' இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

குழந்தைகள் விளையாடும் ரப்பர் பொம்மைகளிலிருந்து பெரியவர்களுக்குத் தேவையான பல பொருள்கள் இங்கு தயாராகுகின்றன. மோட்டார் உதிரிப்பாகங்கள், சைக்கிளுக்குத் தேவையான 'வால்வ் டியூப்கள்' இவையெல்லாம் நேர்த்தியான முறையில் உறுதியானவையாகத் தயாராகின்றன. ஜெனரல் இன்டஸ்றீஸில் டயர்களைப் புதுப்பிக்கும்வேலையும் நடைபெறுகிறது.

மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதென்பதுபோல் பெரிய தொழிற்சாலைக்கு வேண்டிய விஸ்தாரமான இடமில்லாதிருந்தும் எவ்வளவு அழகுள்ள, நவீன, பாவிப்பதற்கு உத்தரவாதமுள்ள பொருள்கள் இங்கு தயாராகின்றன என வியப்படையவேண்டியே இருக்கிறது. இந்த தொழிற்சாலையிலிருந்து மாலைதீவுக்கு பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பதை அறியும்போது வியப்படையாமலிருக்க முடியுமா?

வீட்டுக்குத் தேவையான தளபாடங்களும் இங்குசெய்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன. கதவுக் கைப்பிடிகள் எவர்சில்வரில் உருவாக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்டுள்ள இக்கைப்பிடிகளைப் பார்க்கும் ஒருவர் இவ்வித பிடிகளுக்காகவும் வெளிநாடுகளை இனிநாம் பிடித்துக்கொண்டிருக்கத் தேவையில்லையெனக் கூறவேதோன்றும்.

றிச்சார்ட் பீரிஸ் கம்பனியின் துணை ஸ்தாபனமான ஜெனரல் இன்டஸ்றீஸில் சுமார் 30 பேர் வேலை செய்கிறார்கள். அதிகமானவர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்களே. நல்லதொரு ஸ்தாபனம் சீராக இயங்க அதனை நிர்வகிப்பவர் சீராக இயங்க வேண்டும். ஜெனரல் இன்டஸ்றீஸைப் பொறுத்தவரை அதற்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஊக்கமான உழைப்புக்கும் நல்ல உபசரிப்புக்கும் அதன் மனேஜர் ஒரு எடுத்துக்காட்டு. இத்தகைய பண்புகொண்டவரின் கீழ்வேலைசெய்யும் ஊழியர்கள் பாக்யவான்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஜெனரல் இன்டஸ்றீஸின் வளர்ச்சிக்கு ஒருகாரணமாக அமைந்துள்ள மனேஜர் பெருமிதத்துடன் தெரிவித்தது 'இன்னும் ஐந்து வருடங்களில் எமது தொழிற்சாலை பூரண வளர்ச்சிஅடைந்துவிடும்.'

---கணேஷ்

# இலங்கையின் கைத்தொழில்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

குத்தேவையான கைத்தொழில் பொருட்கள் யாவற்றையும் நாமே தயாரிக்கக்கூடிய சக்தி எமக்கு வந்துவிட்டால் அப்பொழுதுதான் நாங்கள் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் கண்டவர்களாவோம்.

## தொழில்முறைக் கல்வி

கைத்தொழில் முன்னேற்றம் அடைவதற்கு மனித சக்தி நான்கு வகைகளாக பிரயோசனப்படவேண்டியது அவசியமாகிறது. தொழில் நிபுணர்கள் (Technologist) தொழில்நுட்பஸ்தர் (Technecian) தொழிலாளி (Craftsman) இயக்குநர் (Operatives) என்ற நான்கு வகையில் மனித சக்தி அவரவரின் தகுதிக்கேற்ப பயன்படுத்தப்படவேண்டும். இந்த நான்கு பிரிவினரில் தொழிலாளி பிரிவைச் சேர்ந்தவர்களே நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு அதிகம் தேவைப்படுகின்றனர். அடுத்தவர்கள் தொழில்நுட்பஸ்தர் பிரிவைச்சேர்ந்தவர்கள். இயக்குநர்கள் மூன்றாவது அளவிலும், தொழில் நிபுணர்கள் நான்காவது அளவிலுமே தேவைப்படுகிறார்கள். இந்த நான்கு வகைத் தொழில் வல்லுனருக்கும் வேண்டிய அளவில் பயிற்சி அளிக்கக்கூடியதாக தொழில் நுட்பக்கல்வி அமையவேண்டும். கனிஷ்ட வகுப்பிலேயே மாணவர்கள் அந்தத்துறையிலே பிரிக்கப்பட்டு அவ்வத்துறையிலே அவர்களுக்கு பயிற்சியளித்தால் இந்தக்குறை விரைவில் நீங்கிவிடும். இதற்கு திட்டமிட்ட தொழிற் கல்வி முறை மிகவும் அவசியம். தேசியக்கல்விக் கொள்கை விரைவில் அமுலாக்கப்படுவது நன்மை பயக்கும்.

## மூலப் பொருட்கள்

கைத்தொழில்வளர்ச்சிக்கு முதலில்தேவையானதுமூலப் பொருளே. இப்பொழுதியங்கும்கைத்தொழில்களின்மூலப்பொருட்கள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. மூலப்பொருட்கள் இறக்குமதியும் வெளிநாட்டு செலாவணியை கருத்தில் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல தொழிற்சாலைகளின் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கூடிய மட்டில் எமது நாட்டில் உள்ள மூலப்பொருட்களை ஆராய்ச்சி மூலம்கண்டுபிடிப்பது அவசியம். இங்குள்ள மூலப்பொருட்களிலிருந்தே கூடியமட்டில் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதும் அவசியம். வெளிநாட்டு மூலப் பொருகளை வேண்டிய அளவுக்கு இறக்குமதி செய்ய அனுமதி வழங்க அரசாங்கம் பின்னிற்கக்கூடாது.

## கைத்தொழில் கட்டுப்பாடு

ஒரு பொருள் எமது நாட்டில் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதை அளவிட்டு, வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் சிறிது கணக்கிட்டு அந்தத் தொகையான பொருட்களை உற்பத்திசெய்ய எவ்வளவு தொழிற்சாலைகள்தேவை என்பதைமதிப்பிட்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது நாட்டு வளர்ச்சிக்கு அவசியம். உதாரணமாக அலுமினிய உற்பத்தியில் இப்பொழுது நாடு சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கிறது. இனிமேல் வேறெந்தப் புதிய அலுமினியத் தொழிற்சாலையையும் ஆரம்பிக்க அனுமதிக்காது, அவ்விதம் ஆரம்பிக்க அனுமதி கோருவோரை புதிய கைத்தொழிலில் ஈடுபட வழி செய்யவேண்டியது கைத்தொழில் அமைச்சின் கடமையாகும்.

## பொருட்களின் தரம்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 'உற்பத்திப் பொருட்களின் தரம் மக்கள் பாவனைக்கு உகந்ததாக இருக்கவும், ஒரு குறித்த தரத்தையுடையதாகவும் இருக்கக்கூடியதாகக் கண்காணித்து, அதன் பின்னரே அவை சந்தையில் விற்பனையாக அனுமதிக்கப்படவேண்டும். இப்பொழுது பல கைத்தொழில் நிர்வாகிகள் தங்கள் உற்பத்திச் செலவை விட Production Cost) அதிக லாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்வதாக பொதுவாக புகார் கூறப்படுகிறது. இது தவிர்க்கப்படவேண்டும். மூலப் பொருள் செலவு, தொழிற் செலவு. வேறு செலவுகள் யாவும் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு பொருளுக்கும் உற்பத்திச் செலவை மதிப்பிட ஒரு சபை நிறுவப்படலாம். இதனால் ஒரே பொருளை உற்பத்தி செய்யும் பல்வேறு தொழிற்சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சமமான, நீதியான சம்பளம் கிடைக்கவும் ஏதுவாகும்.

## தொழிலாளி-- முதலாளி உறவு

ஒரு கைத்தொழில் ஸ்தாபனம் திறம்பட இயங்க வேண்டுமானால் தொழிலாளி-முதலாளி நல்லுறவு அவசியம். ''நான் பெறும் ஊதியத்துக்கேற்ற உழைப்பை அளிக்கவேண்டும்'' என்ற மனச்சாட்சி தொழிலாளியிடமும், ''நான் கொடுக்கும் ஊதியத்துக்கேற்ற உழைப்பையே தொழிலாளியிடமிருந்துபெறவேண்டும்'' என்ற மனச்சாட்சி முதலாளிக்கும் இருக்குமானால் தொழிலாளி—முதலாளி சச்சரவுகள் ஏற்பட இடமிருக்காது. தொழிலாளியும் மனிதன், முதலாளியும் மனிதன் தான் தொழிலாளி முதலாளி நலனையும்; முதலாளி தொழிலாளி நலனையும் பேணிக்கொண்டால்பிணக்குகளுக்கு இடமிருக்காது. லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்குகொடுக்க வகைசெய்யும் தொழில் மந்திரியின் திட்டம் வரவேற்கக்கூடியதே. சட்டத்தினால் மட்டும் எதையும் சாதிக்கமுடியாது. மனிதர்களின் மனப்போக்கு மாறவேண்டியது மிகவும் அவசியம்.

## வடபகுதியில் கைத்தொழில்

தமிழ்பகுதிகளில் கைத்தொழிலை ஆரம்பிப்பது சாத்தியமா என்ற கேள்வி நம்மில் பலரிடமிருந்தும் கிளம்புகிறது. வடமாகாணத்தில் நல்ல பல தொழிற்சாலைகளை நிறுவலாம் என்பதே இதற்குப்பதிலாகும்!

செல்வத்தை தங்களோடு ஒட்ட வைத்திருப்பவர்கள், அதை நாட்டின் வளர்ச்சிக்காக செலவிட முன்வந்தால் வடமாகாணத்தில் நல்ல தொழிற்சாலைகளை உருவாக்கலாம். வடமாகாணத்தில் உள்ள சில தொழிற்சாலைகளுக்கு அண்மையில்சென்றதன் பேரில் முயற்சியும், நல்ல முதலீடும், ஆர்வமும் இருந்து திட்டமிட்டு செயலாற்றினால் பல தொழிற்சாலைகளை நிறுவி தமிழ்ப் பகுதியின் பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும் என்பது புலனாகின்றது.

கூடியமட்டில் இங்குள்ள மூலப் பொருட்களைக் கொண்டே உற்பத்திகளை ஆரம்பித்தால் அதிகநன்மையடையமுடியும். வடபகுதியில் மறைந்து கிடக்கும் மூலப் பொருட்கள் பற்றிக் கண்டறிய ஒரு ஆராய்ச்சிக் கமிட்டி நிறுவப்படுவது அவசியம்.

தனவந்தர்கள் தங்கள் பணத்தை கைத்தொழிலில் முதலீடுசெய்தால் பலனளிக்காது என்று எண்ணுவது தவறு. திட்டமிட்டு நல்ல முறையில் செயலாற்றினால் வடபகுதியில் பல தொழிற்சாலைகளை நிறுவி நல்ல இலாபம் பெறலாம். இதனால் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வழிபிறக்கும்.


தேசிய கைத்தொழில் வளர்ச்சிக்கு

இதோ எமது பங்கு

தேய்ந்த டயர்களுக்கு உத்தரவாதத்துடன்

புது இழை வார்த்தல்

எல்லாவிதமான றப்பர் பொருட்களையும்

தயாரித்தல்

கடைச்சல், வார்ப்பு வேலைகள்

உள்நாட்டுக் கைத்தொழிலையே

ஆதரியுங்கள்

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

(றிச்சாட் பீரிஸ் கொம்பனியின் துணை ஸ்தாபனம்)

காட்சி அறை:
20, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆலை:
அத்தியடி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7024



லக்கி ஹவுஸ்

யாழ்ப்பாணம்

பல்லாண்டு காலம்உங்கள் அன்பும் ஆதரவும் பெற்ற எமது ஸ்தாபனத்தை தற்சமயம் கே கே. எஸ்.றோட் 67-ம் இல்லத்திற்கு மாற்றியிருக்கிறோம் என அறியத் தருவதோடு உங்களுக்குத் தேவையான பொருட்களை எமது ஸ்தாபனத்தில் வந்து பார்வையிடுமாறு அழைக்கின்றோம்.

வணக்கம்

லக்கி ஹவுஸ்

67, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

போன்: 456


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சிறுகதை, கவிதைப் போட்டி

## கருணைக்கு இனமேது?

பெரி. சண்முகநாதன்

(1)

"இதென்ன மண்ணாங்கட்டிக் கலியாண வீடே...? பெரிய ஆக்களுக்கு இரண்டாந்தரம் விருந்தையிலை இருத்திச் சாப்பாடு குடுக்கினம்... எனக்குப் பசிக்குது. போய்ச் சாப்பிடலாமெண்டாலோ விருந்தையிலை இடம் இல்லை. பந்தலுக்கே கொஞ்சப்பேர்தான் இருந்து சாப்பிடுகினம். ஆனால் கனக்க இடமிருக்குது. நான் பந்தலுக்குள்ளே போயிருக்க அந்தச்சபாமாமாகாதிலைபிடிச்சு இழுத்துக்கொண்டு வந்து விட்டிட்டுப் போறார். அது எளிய சாதிகள் சாப்பிடுற இடமாம்... அங்கு நாங்கள் இருக்கக்கூடாதாம். ஏன் இருக்கப்படாதென்று திருப்பிக்கேட்க, 'வாயைப் பொத்திக்கொண்டிரடா' என்று சொல்லிப் போகிறார்.

"எனக்குப் பசிக்குது.. எளிய சாதியெண்டால் என்ன? சாரம் கட்டின ஆக்கள், அல்லாட்டிச் சேட்டுப் போடாத ஆக்களைத்தான் எளியசாதியெண்டுசொல்லினையோ? அப்படியெண்டா அவர் கந்தையா மாமாவும் சேட்டுப் போடாமல்தானே விருந்தையிலை இருந்து சாப்பிடுறார். ஓ! அவர் 'எங்கடை' மாமா எண்டபடியால் விட்டிட்டினம் போலை.

"எனக்குப் பசிக்குது..... அதென்ன விருந்தையிலை இரண்டு பேர் சண்டைபிடிக்கினம். பெஞ்சனியர் அப்பா ஒரு ஆளுக்குச் சோத்துக் கையாலை அடிக்கிறார். வேறை இரண்டு பேர் அந்த ஆளைத் தள்ளிக்கொண்டு வருகினம். பெஞ்சனியர் அப்பா கோவத்தோடு பேசிறார். 'அட எளிய சாதி நாயே! உனக்கு விருந்தையிலை ஏற எவ்வளவு துணிச்சலடா- எங்களோடை ஒரு சபையிலை இருந்து சாப்பிட வந்திட்டியோடா?' - இந்தப் பெஞ்சனியர் அப்பா பொல்லாதவர், அவனுக்கேன்போட்டு அடிக்கினம். அவனை எளிய சாதி எளியசாதியெண்டு பேசிக்கொண்டு நிக்கினம்- அவன் சேட்டுக் கூடப் போட்டிருக்கிறான்.

"இன்னொருத்தர் பேசிறார். 'பூ! இவர் விருந்தையிலை ஏறியிருந்திட்டார்... நாங்கள் ஒருத்தரும் கவனிக்கேல்லை. எங்கடை பெஞ்சனியரெல்லோ கண்டது. இவங்களுக்கு இடங் கொடுத்தா தலைக்கு மேலை ஏறிவிடுவாங்கள்போலைக்கிடக்கு. இதெல்லாம் காலத்தின்ரை பிழை. அந்த எளிய சாதிப்பயலை வெளியாலே தள்ளுங்கோ...' -பாவம் அந்த மனிசனை நாலைந்து பேர் கழுத்திலை பிடிச்சுத் தள்ளிக்கொண்டு போகினம். தாரோ ஒருத்தர் அந்த மனிசன்ரை வயித்திலை காலாலே உதைஞ்சார். அந்த மனிசன் வாசலில் கட்டியிருந்த வாழை மரத்தோடை போய் விழுந்தான்...

"அந்த மனிசன்ரை கண்ணிலையிருந்து கண்ணீர் வடியுது. பெஞ்சனியர் அப்பாவின்ரை குழம்புக் கை கண்ணில் பட்டு கண் அவனுக்கு எரியிதோ? பெஞ்சனியர் அப்பா அடிச்ச அடி நொந்து போய் அழுகிறானோ? எல்லாரும் வாய்க்குவந்தபடி பேசிக்கொண்டுபோகினம், பாவம் அந்த மனிசன் வாழை மரத்தோடு சாய்ந்து தலைகுனிஞ்சு கொண்டு நிக்கிறான். வாழை மரத்திலை கட்டியிருந்த 'லவுட்பீக்கர்' பாடுது.' சாதிகள் இல்லையடி பாப்பா, உயர் தாழ்வு உயர்ச்சி சொல்லல் பாவம்' எண்டு கப்பலோட்டிய தமிழனிலை பாடிய பாட்டைப் பாடுது. நான் சிரிச்சன். ஏன் சிரிச்சன் எண்டு எனக்குத் தெரியேல்லை. வாழைமரத்தோடை நிண்ட மனிசன் என்னை முழுசிப்பாக்கிறான். பிறகு பேசாமல் போறான்.

"அம்மா விருந்தையிலை நிண்டு வரச்சொல்லிக் கை காட்டினா. இப்பதான் அவவுக்கு என்ரை நினைப்பு வந்தது போலை.................. போறன்......"

(2)

"ஒரேவெய்யிலாயிருக்கு... ஒரு தொப்பி வாங்கித்தரச் சொல்லி அப்பாவை எத்தினை தரம் கேட்டுப்போட்டன் வாங்கித்தரேல்லை. நேற்றைக்கும் பள்ளியாலை வாறப்போ எங்கடை வயலிலை வேலைசெய்யிற சின்னையனின்ரை மகன் கந்தசாமியின்ரை குடைக்குள்ளே வந்தனான் எண்டு அம்மா பேசினா. அவன் எளிய சாதியாம். அவனோடை வரப்படாதாம்.

"இண்டைக்குத்தான் வாத்தியார் கடவுள்படைச்ச உயிர்களிடத்தேவித்தியாசம் பாக்கக்கூடாதெண்டு சொன்னவர். கடவுள்தானே எங்களையெல்லாம் படைச்சவர். அவர் எங்களையெல்லாம் படைக்கிறபோது எளியசாதி நல்ல சாதியெண்டெல்லாம் படைக்கேல்லை எண்டு வாத்தியார் சொல்லுறார். இந்த அம்மாவுக்கு ஒண்டும் தெரியாது. கடவுள் படைத்த மனிசரை இந்தப் பெஞ்சனியர் அப்பாதான் எளிய சாதி, நல்ல சாதியெண்டு பிரிச்சு வைக்கிறார்.

"கடவுள்தானே உலகத்துக்குப்பெரியவர். அந்தப் பெரிய கடவுள் படைச்சு வைச்சதை தாங்கள் நினைச்ச மாதிரிப்பிரிச்சுவைக்க இவையெல்லாருக்கும் உரிமை இருக்குதோ? இல்லைத்தானே!

"ஏன் இந்தக் கடவுள் இதையெல்லாம் பாத்துக்கொண்டு பேசாமலிருக்கிறார்? அவர் கவனிக்காமலிருப்பாரோ? யாராவது இதைப்பற்றிக் கடவுளிட்டேச்சொன்னால் என்ன? எங்கடைபுள்ளையார்கோவில் குருசாமிஐயரிட்டை சொன்னால் பின்னேரம் பூசைபண்ணும் நேரம் சொல்லுவாரோ? சே! அவரும் சொல்லமாட்டார், ஏனெண்டால்அவரும்எளிய சாதியளெண்டு சொல்லிச் சில மனிசரை கோயிலுக்குள் விடுகிறதில்லை.

"கடவுளிட்டே இதைப் போய் தார் சொல்லுறது? அவரை எங்கை பாக்கலாம்? ம் - எட...! தார் என்னைப் பிடிச்சு இழுக்கிறது. ஒரு தாடிச்சாமியார் என்னை ரோட்டுக்கரைக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டுப் போட்டு, 'தம்பி! நல்ல காலம்! நானில்லாவிட்டால் இப்போது நீ காரில் அடிபட்டிருப்பாய். எங்கை பார்த்துக்கொண்டு நடக்கிறாய்?" எண்டுகேட்டார். 'நான்கடவுளைப்பாத்துப் போறன்' எண்டு சொல்ல, சாமியார்என்னைஒருமாதிரியாய்ப் பாத்துப்போட்டுச் சிரிக்கிறார். பிறகு, 'தம்பி கடவுளை நீ ஏன் பாக்கவேண்டும். உனக்கென்னவந்துவிட்டது' எண்டு கேக்கிறார்.

'சாமியாரே! எங்களை எல்லாம் கடவுள்தானே படைச்சவர்' எண்டு சாமியாரைக்கேட்டன். அவர் ஓமெண்டு சொல்லுறார். எல்லாருக்கும் தலைவனான கடவுள் படைச்ச மனிசரை எளியசாதி, நல்ல சாதியெண்டு பிரிச்சுவைக்க தாருக்கு உரிமையிருக்கு எண்டு சாமியாரைப்பிறகும் கேட்டன். அவர் என்னை முழுசிவைச்சுப் பாக்கிறார். சடாரெண்டு என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு 'யாருக்கும் உரிமையில்லையடாதம்பி, யாருக்கும் உரிமையில்லையடா'' எண்டு இரண்டுதரம் சொல்லுறார். சாமியாருடைய கையை உதறிப்போட்டு 'எங்கடை பெஞ்சனியர் அப்பாவும் மற்றவையெல்லாரும் படுமோசம். எளியசாதியெண்டு சொல்லிஎல்லாருக்கும் அடிக்கினம். இதைப்பற்றித்தான் நான் கடவுளிட்டேச் சொல்லவேணும். கடவுளைத்தான் எங்கை பார்க்கலாம் எண்டு தெரியாமல் நிக்கிறன். 'சாமியார், நீங்களெல்லாம் கடவுளைக் கண்டிருப்பியள், எனக்கு ஒருக்காக் கடவுளைக் காட்டிறியளே' எண்டு சாமியாரைக்கேட்டன். சாமியார் கடகட-வெண்டு சிரிக்கிறார். பிறகும் என்னைக் கட்டிப்பிடிக்கிறார். பிறகும் நான் உதறிப்போட்டு நிக்கிறன். சாமியார் கனக்க யோசிச்சுப்போட்டு 'தம்பி, உனக்குக் கடவுளைப் பாக்க ஆசையெண்டால் வந்து அந்த மரத்துக்குக்கீழ நில், உனக்குக் கடவுளைக் காட்டிறன் தம்பி' எண்டு சொல்லிப்போட்டு மரத்துக்குக் கீழ போறார்.

"இந்தத் தாடிக்காறர் என்னை ஏமாத்தப் போறாரோ? சே! அவர் சாமியார். அப்பிடியெல்லாம் செய்யமாட்டார். நான்சாமியாரடிக்குப்போறன்.

"அந்தப்புளிய மரத்துக்குக் கீழைநாட்டிக்கிடந்தவைரவசூலத்தைக் காட்டி, 'தம்பி இதுவும் ஒரு கடவுள்' எண்டு சாமியார் சொல்லுறார். எனக்கு ஒண்டும் விளங்

(14-ம் பக்கம் பார்க்க)

### பரிசு பெற்ற கதை

### பரிசு பெற்ற கவிதை

அடிபிடிக்குக் கேட்கவில்லை
அடிபிடித்துக் கேட்கின்றோம்!
முடிபிடித்துக் கேட்விலை
மடிவிரித்துக் கேட்கின்றோம்!
தடியெடுத்துக் கேட்கவில்லை
நடுநிலைக்குக் கேட்கின்றோம்!
கொடுமைகளைக் கைகழுவிக்
கொடை கொடுக்கக் கேட்கின்றோம்!

என்சட்டை காற்சட்டை!
என்வேலை பெரிதென்றும்,
நன்னிலையில் நானென்றும்
நாதடித்து நிற்பவனே!
உன்கையில் தொழிலுக்கோ
ஓடோடி ஆயிரவர்
முன்வந்து நிற்கின்றார்!
முடியாதென் றேயாரும்
பின்னிற்குங் கடிதான
பெருந்தொண்டு செய்பவனை
நின்மேன்மை மிஞ்சிடுமோ?
நேர்மையுடன் சிந்திப்பாய்!

மலகூட வாளியினில்
மணம் பொங்கு ஊத்தையினை
சலம்பெய்த வீதியினைச்
சாக்கடையை, தன்னந்தக்
கலவோடு மெய்யோடு
கழுவுகிறான், அள்ளுகிறான்!
பலநூலுங் கற்றவரைப்
பண்டிதரை ஏனப்பா!
உன்னெஞ்சைக் கேட்டுப்பார்!
உரைப்பதனை ஏற்றுக்கொள்!
கன்னெஞ்சத் தனம்விட்டுக்
கைகோத்து வாழப்பார்!

ஏற்றுவருங் காசிற்கு
இயன்றளவு செய்வோனே!
ஆற்றுகின்ற செய்கைக்கு
அளவாகப் பணம் பெற்று
சோற்றினுக்கே பாடுபடும்
தொழிலாளி யைவிட நீ
ஏற்றமுளன் என்றுனது
இதயந்தான் சொல்லிடுமா?

கொண்டிடுநல் மனையரசி
குணம்நம்பத் தெரியாமல்
அண்டையினில் அவளருகில்
ஆள்காவல் வைத்தமைதி
கண்டிடற்குங் காசுபணம்
கரைக்கின்ற இவ்வுலகில்
பெண்டிர்குணம் நடைநம்பிப்
பேசாது போயுழைத்துக்
கொண்டுவரும் கூலிகுணங்
குறைந்தவனா என்றுந்தன்
உள்ளத்தைக் கேளப்பா!
உரைப்பதனை ஏற்றுக்கொள்!
அள்ளித் தழுவியவன்
அருமுள்ளம் ஏத்திடுக!

அரவணைக்குந் தாயே உன்
அண்ணனிலும் உனைக்குறைந்த
பரிவுடனே பார்க்கையிலே
பதறுகின்ற நீசிறிது
உரிமையெனும் இல்லாத
ஒருவனைப் போய்க் கீழென்று
சருவுகையில் அந்நெஞ்சம்
சாம்பாதோ, வேகாதோ?
நீயேகேள் உன்நெஞ்சை!
நெஞ்சம் உரைப்பதுபோல்
தாயேபோல் யார்யார்க்கும்
தயவாய் நடந்திடுக!

போட்டெறிந்த விதைபல்கிப்
பொன்னாக விளைவதற்குப்
பாட்டாளி கைகளினைப்
பார்த்திருக்கும் வேளாள!
மாட்டினையே நினைவூட்டி
வயிற்றிற்கே வழிதேடும்
கூட்டங்கள் உனில்தாழ்ந்த
குணத்தனவா என்றுனது
மார்தொட்டுக் கேட்டிடுக!
மனச்சான்று சொன்னபடி
தேர்கட்டி வைத்தந்த
திருக்குலத்தை ஊர்விப்பாய்!

தின்றழிக்கப் பணந்தந்து
தெருச்சுற்றல் சுவைகளிலே
சென்றழிக்கப் பணந்தந்து
செயல்தந்த பணிமனையில்
* நன்றிநிதி முதுமையிலே
நண்ணுகின்ற ஊழியரே!

* பென்ஷன்

அன்றடித்து அன்றுண்டு
அடுப்படியில் தூங்கி, மனம்
குன்றலற்று வாழ்ந்துவருங்
குணம் உம்மில் குறைந்ததுவா?
சொல்லட்டும் உம்மிதயம்!
தொலையட்டும் வேற்றுமைகள்!
வெல்லட்டும் ஒற்றுமையும்
வேதனைகள் போயகல!
வீட்டிற்குள் விடுவதுவும்
விருந்திற்குப் போவதுவும்
கூட்டிக்கொண் டுலவுவதும்
குலஞ்சாதி பார்த்தே நம்
நாட்டிற்குள் நடக்கிறது!
நாளைக்கே தொடங்கிக்கொண்
டாட்டங்கள் அத்தனையும்
குணம்பார்த்தே அமையட்டும்!
ஊட்டம் பெறவும்நாம்
ஓங்கிடவும் வழியிதுவே!
பகுத்தறிந்த நெஞ்சைக்கேள்
பக்கபலம் தரும்! நேர்மை!
வகுத்த இந்தப் பாதையிலே
வரிந்துகட்டிச் சென்றிடுவாய்!

ஊத்தையுமிழ் கந்தையினை
ஒட்டுமுடல் வியர்வையினை
பார்த்திறைவன் காய்வதிலை!
பண்பிலியை யே, சுடுவர்!
ஆத்திகர்காள்! ஆண்டவனின்
அடிதொழுது மேன்மையுற
தீக்குணர்க்கும் உரிமையுண்டே!
திறந்திடுவீர் கோயில்களை!
மனச்சான்றைக் கேட்டிடுவீர்!
மடைத்தனத்து மரபுவழி
இனச்சான்றை விட்டிடுவீர்!
ஏற்றம்இன் றேதொடர!

தேங்கி மிகும் வேற்றுமைகள்
சிந்தையிலே கொள்ளாமல்
ஈங்கெமது நாட்டினிலே
இருக்கின்ற யாவரதும்
தீங்ககன்ற ஆசைகளைத்
தீய்க்காமல் அடைவிக்க
நாங்கனிந்து இதயங்கள்
நடைமுறையில் பாடுபடின்

வீடுயரும் நாடுயரும்
வேற்றுமைகள் மாண்டொழியும்!
ஊடுயரும் மாந்தருளம் ஓங்கி!

ஒன்றே இனம் ஒன்றே திறன்



ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (13ம் பக்கத்தொடர்ச்சி)

கேல்லை. இதுவும்ஒரு கடவுள் எண்டு சொல்லுரூர்.வேறே டவுளும் இருக்குதோ? 'ஒருவனேதேவன்' எண்டு தானே வாத்தியார் எந்த நேரமும் சொல்லுறவர்...... வாத்தியாருக்கென்ன தெரியும்? இவர் சாமியார்! இவர் சொல்லுரூர் இப்படியெண்டு— 'தம்பி! அதோ இன்னுமொரு கடவுள் வாரூர்' எண்டு சொல்லி ஒரு பக்கத்துக்கையைக்காட்டினூர் சாமியார். நான் அவர் கை காட்டின பக்கம் பாக்கிறன். அங்கைஎங்கடை வாத்தியார் சைக்கிளிலை வாரூர். இதென்ன எங்கடை வாத்தியாரைப் பாத்துச் சாமியார் கடவுள் எண்டு சொல்லுரூரே. சாமியாருக்கு மூளை ஏதோ.. சாமியார் என்னைப் பாத்துச் சிரிக்கிரூர். எனக்குச் சிரிப்பு வருகுது. நான் சிரிக்கேல்லை.

'தம்பி! அதோ ஒரு கடவுள் போரூர்' எண்டு சாமியார் ரோட்டிலை போய்க் கொண்டிருந்த முனியாண்டியைக் காட்டிச்சொல்லுரூர். அவன் கக்கூசு எடுக்கிற தோட்டியைப் பாத்து இவர் கடவுளெண்டு சொல்லுரூரே ...சாமியாருக்கு உண்மையிலே ஏதாவது விசர் கிசரோ....? சீ! தெரியாமல் வந்து இந்தத் தாடிக்காறனிட்டே மாட்டிப் போட்டனே — எண்டாலும் இவர் சாமியார் ...

'தம்பி அங்கைபார். இன்னெரு பெரிய கடவுள் போரூர்' எண்டு சொல்லி சாமியார் மற்றப்பக்கத்துக்குக் கையைக் காட்டுரூர். சாமியார் கை காட்டிற பக்கத்தைப்பாக்கிறன் ... சிரிப்பு வந்திது-சிரிச்சுப் போட்டன். அங்கை எங்கடை வயலிலை வேலைசெய்யிற சின்னையன் மம்பட்டியோடை போரூன். எனக்கு ஒண்டும் விளங்கேல்லை...

''என்ன சாமியார்! கடவுளைக் காட்டிறன் எண்டு கூட்டிக்கொண்டு வந்து கக்கூசுக்காறனையும், கந்தப்பு வாத்தியாரையும் காட்டிறியள். நான் என்ன சின்னப் பொடியனெண்டு பேக்காட்டப் பாக்கிறியளோ?''— கோவத்தோடைகேக்கிறன். சாமியார் சிரிச்சுப்போட்டு 'தம்பி! கடவுளின் தொழில்கள் எவை' எண்டு கேட்டார். நேற்றுத்தானே வகுப்பிலை படிச்சனுன். அப்பிடி மறந்து போவனே. 'படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்' —கடவெண்டு சொல்லிப் போட்டன்...

''சாமியார் முதுகிலை தட்டிப் போட்டுச் சொல்லுரூர். இந்த அஞ்சு தொழில்களிலும் முக்கியமான தொழில் காத்தலாம். இந்த தொழிலை மனிசருக்குச் செய்யிறதுக்கு கடவுள் மனிசவடிவத்திலை கொஞ்சக் குட்டிக்கடவுள்களைப் படைச்சிருக்கிரூராம். என்ரை வாத்தியாரும், கக்கூசுக்காற முனியாண்டியும், சின்னையனும்குட்டிக்கடவுள்களாம். எங்களுக்கு அறிவு வரச்செய்யிறதுக்காக கல்வி போதிக்கிறதுக்கு வாத்தியார் இருக்கிரூராம். நாங்கள் சீவியத்திலை தடம் புரண்டு விழுந்துபோகாமல் அறிவு காப்பாற்றுகிறதாம். அப்பிடிப்பட்ட அறிவைத் தந்து வாத்தியார்க் கடவுள் எங்களைக் காக்கிரூராம். இதனுல் தானும் எழுத்தறிவிச்சவன் இறைவனுவன்எண்ட பழமொழிவந்ததாம். இப்பிடிச்சொல்லிப்போட்டுவிளங்குதோ எண்டு சாமியார் கேட்டார். நான் பேசாமல் மெதுவாய்த்தலையை ஆட்டிறன்...

''சாமியார்பிறகும் சொல்லுரூர். நாங்கள் உசிரோடு வாழுறதுக்குச் சாப்பாடு அவசியமாம். அந்தச் சாப்பாட்டை உண்டாக்கி எங்களையெல்லாம் காக்கிறது சின்னையனைப்போல இருக்கிற குட்டிக்கடவுள்கள் தாமாம். சின்னையன்போல ஆட்கள் வேலைசெய்யாமல் இருந்தால் நாங்களெல்லாம் சாப்பாடில்லாமல் அழிஞ்சு போகவேணுமாம். அதனுலே சின்னையனைப்போலை இருக்கிற குட்டிக்கடவுள் களாலை எங்களை அழிக்கவும் முடியுமாம். ஆக்கவும் முடியுமாம். இதனுலே தானும் பெரிய ஆக்கள் 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' எண்டு சொல்லி வச்சிருக்கினமாம். சொல்லிப்போட்டுப் பிறகும் 'விளங்குதோ?' எண்டு கேட்டார். மெய் மெய்யா எனக்குக் கொஞ்சம்விளங்கிச்சுது. கொஞ்சம் உசாராய்த் தலையை ஆட்டிறன் ...

''சாமியார்பிறகும் ஏதோ சொல்லுரூர். எங்களுடைய அசுத்தங்களையெல்லாம் சுத்தஞ் செய்து நாங்களெல்லாம் சுகாதாரமாய்ச் சுக வாழ்வு வாழ முனியாண்டியைப் போலை இருக்கிற குட்டிக் கடவுள்கள்தானும் வழி வகுக்கினம். முனியாண்டியைப் போல இருக்கிற ஆக்களெல்லாம் வேலைநிறுத்தஞ் செய்தா நாங்களெல்லாம் அழுக்குக்குள்ளே அழுந்திப் போய் அழிய வேண்டியது தானும். எங்களையெல்லாம் முடை நாத்தங்களிலை மூழுகிப் போகாமல் 'முனியாண்டிக்கடவுள்' கள் தானும் காக்கினம் எண்டு சொல்லிப் போட்டு பிறகும் 'விளங்குதா!' எண்டு கேட்டார். எனக்கு மெய் மெய்யா எல்லாம் விளங்கிப்போச்சு. ஓமெண்டு உசாராய்ச் சொல்லுறன்..

'சாமியார் பிறகும் பேசிரூர். இப்பிடியெல்லாம் எங்களைச் சுத்திக் குட்டிக்கடவுள்கள் இருக்கினமாம். இந்தக் குட்டிக்கடவுள்களாலை எங்களை ஆக்கவும் முடியுமாம். அழிக்கவும் முடியுமாம் ஆனுல் மனிசரைப்போல திரியும் இந்தச் சின்னையன் கடவுள்களையும், முனியாண்டிக் கடவுள்களையும் எங்கடை பெஞ்சனியர் அப்பா போல உள்ள ஆக்கள் எளிய சாதியெண்டெல்லாம் சொல்லி அவமதிக்கினமாம். எங்களைக் காக்கிற கடவுள்களை நாங்கள் அவமதிக்கிறது சரியா எண்டுகேக்கிரூர். இப்படி பெஞ்சனியர் அப்பா ஆக்களெல்லாம் ஒரு வழியில் கடவுளின்ரை காத்தல் தொழிலிலை பங்கு கொண்டிருக்கிற குட்டிக்கடவுளை அவமதிச்சுப்போட்டு இன்னெரு வழியில் மேளதாளங்களோடை கடவுளை மரியாதைசெய்து கும்பிடுறதிலை என்ன பயனும். என்ன பயனெண்டு நான் கேக்கிறன்? சீ! இந்த மனிசருக்கு மூளை இல்லை... கடவுளின்ரை பிரதிநிதிகளாய் இருக்கிற இந்தக் கருணை வடிவங்களிட்டே வித்தியாசம் ஏன் காட்ட வேணுமாம். கருணைக்கு இனமிருக்கோ எண்டு என்னைக் கேட்டுப்போட்டுப் போரூர். நான் உங்களைக் கேக்கிறன். கருணைக்கும் சாதியிருக்குதோ?


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரி சேட்டுகள்
- கால்மேசுகள்

(Nylon & Cotton)

லேடன் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# சொறி சிரங்குடன் போராட்டம்

சொறி, சிரங்கு ஒருவகை கண்ணுக்குத் தெரியாத பல சிற்றறைகளையுடைய மிருகப்பரசிவியாகும் (parasite). இது ஓர் அங்குலத்திலே 1/60 பங்கு நீளமாகும். ஆமைபோன்ற உருவமுடையது. அது மனிதர்களின் மேல் தோலைத் துளைத்து ஊடுருவிக்கொண்டு தோலின் அடியிலே முட்டைகளையிட்டு குஞ்சு பொரித்து சிரங்கை அதிகரிக்கும். சிரங்குப் பூச்சி தீவிரமாக வம்ச விருத்தி செய்யும் ஒட்டுணிப் பூச்சியாகும்.

சிரங்குப் பூச்சி விசேடமாகக் கைவிரல்களின் இடுக்குகள், கமக்கட்டு, கைகளின் உட்புறம், வாயின்உதடுகள், ஜனனேந்திரிய உறுப்புகள், அதைச்சுற்றிய மிருதுவான பாகங்களில்தான் விரைவில் குடியேறும். சிரங்குக் கிருமிகள் அதிகமாக இரவிலே தான் எழுச்சிகொண்டு தன் தொழிலைச் செய்து துன்புறுத்துகின்றன. அதனுல் சொறி இரவில் கூடுகின்றது. அதுமட்டுமன்று குளிர்ச்சியான நேரங்களில் சிரங்குக் கிருமிகளின் தாக்குதல் கூடுவதால்தான் இரவு நேரங்களில் நோயாளிக்கு நமைச்சல் அதிகரிக்கிறது. சிரங்குப்பூச்சிகள் குஞ்சுகள்பொரிக்கும் காலங்களிலும் தங்கள் சொந்தத் தேவைக்கு வளை தோண்டிக் கொண்டு இருக்கின்றன. இப்படியாகச் சிரங்குப் பூச்சிகள் வளைக்குள்ளேயே இருந்தால் - சிரங்கின் தொற்றும் தன்மை இராது- ஆனுல் சில சிரங்குப் பூச்சிகள் (விசேடமாக இளம் பூச்சிகள்)விளையாடுவதற்கு வெளியில் வரும். இதனுல் நோயாளியின் உள்ளுடுப்புக்களிலும் படுக்கைத் துணிகளிலும் அவர் பாவிக்கும் பாத்திரங்களிலும் அவை ஒட்டிக் கொள்ளும்படியான நிலைமை ஏற்படுகின்றன. இந்தக் காலத்தில் அவர்களோடு பழகுவதினுலும் கதைப்பதனுலும் அவரின் படுக்கை விரிப்புக்கள் - ஆசனங்களில் அமருவதாலும் - அவர் பாவித்த பாத்திரங்களில் தெரிந்தோ தெரியாமலோ பானங்களைக் குடிப்பதாலும் - அவர் தலை சீவிய சீப்பினுல் தலைகோதுவதாலும்- அவரின் சவர்க்காரம்- புத்தகம்- உடுப்பு- பென்சில் முதலியவற்றைப் பாவிப்பதாலும் இவ்வியாதி பெரும்பாலும் பிறருக்குத்தொத்தி விடும்.

அசுத்தஉணவு, ஆரோக்கியமற்ற சூழ்நிலை என்பன சிரங்கு தொற்றுவதற்கு காரணமாக அமைகின்றன.

சிரங்குப்பூச்சிக்கு நம்முடைய உடம்பிலே சீவிக்கும் பொழுது உணவும் இருப்பிடமும் கிடைக்கின்றன. சுவாசிப்பதற்குக் காற்றுக் கிடைப்பதில்லை. சுவாசிக்கும் காற்றை வெளியில் இருந்துதான் பெற்றுக் கொள்ளவேண்டும். இதைக் கொல்லுவதற்கு வழி அது சுவாசிப்பதற்கு காற்றுக்கிடையாமல் செய்வதே. அதற்கு ஒவ்வொரு காலை மாலையும் நோயாளியின் உடலில்டெற்றோல் (Dettol); வேப்பம் நெய் முதலியன பூசி அது காய்ந்ததும் நன்கு லைவ் போய் சோப்பு அல்லது கிருமி கொல்லும் சவர்க்காரம் பூசி ஸ்நானம் செய்து காலை மாலை கெந்தக லேகியம்- 1 பாக்களவுஉட் கொள்ளவேண்டும். சாப்பிடும் உணவிலும் சுத்திசெய்த கந்தகம் சேர்த்துக்கொள்ளலாம். புண்சொறிவுள்ள இடங்களுக்குக் கந்தகக் களிம்பு- அல்லது கந்தகச் சேர்வை போடவும். டேனிஷ் தைலம் (Danish Ointment) பூசுவதாலும் பூச்சி சுவாசிக்க முடியாமல் இறந்துவிடும்.

## நோயும் சிகிச்சையும்—5

இரவில் படுக்கப்போவதற்குச் சற்று முன்பு சொறி, சிரங்குகளை இளவெந்நீரினுலும்சோப்பினுலும்நன்ருகத் தேய்த்துக்கழுவிக் குளிக்க வேண்டும். பின்னர் கந்தகச் சேர்வையையோ அல்லது பச்சை எண்ணையையோ கரப்பான் எண்ணையையோ பூசவேண்டும். பின்னர் ஓர் பழைய துணியை உடுத்திக் கொண்டு படுங்கள், அப்படியே மறுநாள் காலை மாலையிலும் தடவுங்கள். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கொருமுறை படுக்கைகளை சுடுநீரில் அவித்தோ அல்லது கூடாததுணிகளை எரித்தோ விடவேண்டும்.

எப்பொழுதும் சொறிவுள்ள சிரங்குப்புண் பகுதிக்கு சேராங் கொட்டை எண்ணையையோ கடுகெண்ணையையோ பூசவேண்டும்.

சொறி சிரங்கில் உபயோகிக்கும் பானம்

வேம்பு- கோரைக்கிழங்கு- திரிகடுகு (சுக்கு, திற்பலி, மிளகு)-வெட்பாலை முதலியவற்றை 1/8 ஆகக் காய்ச்சி எடுத்துக்கொண்டு நீர்விடாயுள்ள நேரங்களில் பருகக் கொடுக்கவும்.

சிரங்குமாறி அயறுவிழும் தருணத்தில் நன்ருகப்பேதி கொடுத்தல் வேண்டும். (திரிபலைச் சூரணம் சித்தலவங்காரி).

சொறி சிரங்கின் தழும்புகள் நிவர்த்தியாவதற்கு

வேம்பு-மஞ்சள்- மரமஞ்சள்-துளசி-பேய்ப்புடல்- கோட்டம்- அமுக்கிராய் கிழங்கு-தேவதாரு- முருங்கை-கடுகு- தும்பை-கொத்தமல்லி -இலவங்கம் பட்டை முதலியவற்றைச் சமபாகமாகச் சூரணம் செய்து ஏதாவது ஒரு தைலத்துடன் சேர்த்து தழும்புகள் உள்ள இடத்தில் பூசிவர தழும்புகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

சொறி சிரங்கு உள்ளவர் வசித்த அறை குங்குலியப் புகை- சாம்பிராணிப் புகை- வேப்பம்புகை அல்லது ஏதேனும் கிருமிநாசினி தெளித்தல் வேண்டும்.

எப்பொழுதும் சிரங்கு மாறியவர் குளிக்கும் பொழுது கஸ்தூரி மஞ்சள் தேய்த்தோ அல்லது வச்சிர பீசத்தைலம், மஹாவஜ்ர தைலம், வேப்பெண்ணெமுதலியவையில் ஏதும் ஒன்றைத் தேய்த்தோ நல்ல கிருமிநாசினிச் சவர்க்காரம் பூசித் தினமும் ஸ்நானம் செய்து வரல்வேண்டும்.


க. வேல்மணி

அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி, கொழும்பு


மேலைத்தேசத்தவர் நம்மைப்போலத்தான் சொறி, சிரங்கு தொற்றும் வியாதி என்றும் அதிலிருந்து குஷ்டம் முதலியன தோன்றுவதற்கு இடமுண்டு என்றும் கருதுகிரூர்கள். சொறி, சிரங்கு மனிதனுக்கு, வராமல் காப்பதுதான் சிறந்தது. சுத்தமானவசிப்பிடம், நல்ல உணவு, சுத்தக்காற்று, சுத்த நீர் என்பன சொறி சிரங்கைத் துரத்தியடிக்கும் அரண்களாகும்.

## அவுரிச்சாய ஆராய்ச்சி

சென்ற நூற்றூண்டின் இறுதி. செயற்கைச் சாயங்கள் விரைவில் வடிக்கத்திற்கு வந்து கொண்டிருந்த காலம். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான அவுரிச்சாயத்தைச் செயற்கைமுறையில் செய்யும் முயற்சியில் ஜெர்மானிய விஞ்ஞானிகள் ஈடுபட்டிருந்தனர். எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பயனில்லை. மிகமலிவான பூச்சிமருந்து (நாப்தலீன்) உருண்டைகளிலிருந்து அவுரியைப்பெறவேண்டுமென்று விஞ்ஞானிகள் முயன்று வந்தனர். அவர்களுள் ஓர் இளம் விஞ்ஞானி, குடுவையொன்றில் மாப்தலீனையும், கந்தகாமிலத்தையும் (sulphuri ccid) போட்டுக் காய்ச்சிக் கொண்டிருந்தார். நவப்பநிலையை அறிய அதனுள் வெப்பமானி ஒன்றும் இருந்தது. அவ்விளைஞர் வெப்பநிலையை அறிவதற்காக வெப்பமானியை எடுக்கும்போது இது குடுவைக்குள் உடைந்துவிட்டது. அதற்குள் இருந்த பாதரசம்விழுந்து சிறுதுளியாகக் குடுவைக்குள் தங்கிவிட்டது. தமது தலைவர் அதைப்பார்த்தால் என்ன செய்வாரோ என அஞ்சிய வண்ணம் அவர் சோதனை முடியும்வரை காத்திருந்தார். அதன்பின் குடுவையிலிருந்த பொருள் ஆராயப்பட்டது. அப்போது இளைஞரது அச்சம் அளவற்ற வியப்பாக மாறியது. அதுவரை இதே சோதனை பலமுறை செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அது அவுரியைத் தயாரிக்கத் தேவையான பொருளைத்தரவில்லை. ஆனுல் இம்முறையோ தற்செயலாகக் கலந்த பாதரசம் சோதனைக்கு வெற்றியை அளித்திருந்தது. இதனுல் நாப்தலீனிலிருந்து அவுரிச்சாயம் கிடைக்கும் வகை தெரிந்துவிட்டது.

## ஈழத்தில் முதல் தமிழ் சினிமா நடிகர் !

ஈழத்தின் முதலாவது சினிமா நடிகர் யார் தெரியுமா? அவர்தான் இலங்கை வானெலி நாடகப் பொறுப்பாளர் திரு. சண்முகநாதன் (சானு). பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான 'தேவதாஸி'யில் ஒரு சிறிய பாத்திரமேற்று நடித்திருக்கிரூர் சானு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கைத்தொழில்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை வளர்க்க வேண்டும், பொருளாதார வளம் பெறவேண்டும் என்ற எண்ணம் அரசியல் தலைவர்கள் மத்தியில் உதித்தது எனினும் அப்பொழுதுங் கூட மொழி, இனப் பிரச்னைகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தினால் நாட்டில் பூசலும், நெருக்கடியும் வளர்ந்தனவேயன்றி பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிவகைகள் சரிவரச் செய்யப்படவில்லை. இதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் துரதிஷ்டங்கள் நாட்டின் நிலைமையை கேவலமாக்கி பெரும் கஷ்டத்தை உண்டு பண்ணியது. உல்லாச உத்தியோகங்களே சொந்தவாழ்க்கைக்கு சுபீட்சமளிக்கும் என்ற சுயநலத்தோடு அவற்றிலே 'காதல்' கொண்டு காலத்தைக் கழித்தனர் பொதுமக்கள். உத்தியோகத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கல்விமுறை, (சுதந்திரம் பெற்று பத்துவருடங்களாகியும் மாற்றப்படவில்லை. ஏன் இப்பொழுதுங் கூட தேசியக்கல்வி-தொழிற் கல்விக்கு. சீரான கல்விக்கு வகைசெய்யும் தேசியக்கல்வி முறை என்று பேசப்படுகிறதே தவிர இன்னும் செயல் முறையில் வரவில்லையே!) இளைஞர்களுக்கு உத்தியோகமோகத்தை வளர்ப்பதற்கு அத்திவாரமாக அமைந்திருந்தது.

அரசியல்தலைவர்கள், அதி முக்கியமற்ற பிரச்னைகளில் மண்டையைக்குழப்பி, நாட்டையும் குழப்பநிலைக்குள் தவிக்கவிட்டுக் கொண்டிருந்தனர். பாடசாலைகளிலிருந்து வெளியேறும் இளைஞர்கள் காற்சட்டை உத்தியோகங்களை "காதலி"த்துக்கொண்டு இருந்தனர். இந்நேரத்தில் வேலையில்லாதோர் தொகை அதிகரித்தது. உணவுப் பொருட்களும் மற்றும் கைத்தொழில் பொருட்களுக்குமாக பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி கரைந்துகொண்டிருந்தது. துண்டுவிழும். வரவு செலவுத் திட்டங்கள் அடுத்தடுத்து சமர்ப்பிக்கப்பட்டன. இவ்விதமாகப் பல விதத்திலும் நாடு முன்னேறுவதற்குப் பதில் பின்னோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

1960-ம் ஆண்டளவில் ஆட்சியாளருக்குப் புதிய யோசனை ஒன்று பிறந்ததோ என்னவோ திடீரென வெளிநாட்டுச் செலாவணியை கட்டுப்படுத்த ஆரம்பித்தார்கள்! இதனால் வெளிநாட்டையே சகலபொருட்களுக்கும் நம்பியிருந்த பொது மக்கள் நிலைமை அதோகதிதான். இறக்குமதி லைசென்சுகள் கட்டுப்படுத்தப்பட்டதால் பல உணவுப் பொருட்களுக்கும் உப பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. வெளிநாட்டுச் செலாவணியை கட்டுப்படுத்தி நாட்டு பொருளாதாரத்தை பலப்படுத்த முயல்வது நல்லது தான். ஆனால் அதே நேரத்தில் கமத்தொழில், கைத்தொழில் வளர்ச்சிக்கு தக்க படி நடவடிக்கை எடுக்க வேண்டியதும் மிக அவசியமாகும். விவசாய கைத்தொழில் வளர்ச்சிக்கு அப்போதைய அரசாங்கத்தார் தக்கமுறையில் திட்டமிட்டு செயலாற்றவில்லை என்பது ஒரு குறையாக இருந்த போதிலும் அவர்கள் மேற்கொண்ட செலாவணிக்கட்டுப்பாட்டால், பொருட்கள் தட்டுப்பாடும், அதன் பயனாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் தடைசெய்ய முடியாது வளர்ந்தபோதிலும் விவசாயகைத்தொழில் துறையில மக்கள் ஈடுபட மக்களை அது சிறிதளவாவது நிர்ப்பந்தித்தது என்று கூறலாம்,

1960-ல் இருந்து 1965 வளர்ந்துவிட்டது — ஐந்து ஆண்டுகள். இந்த ஐந்து ஆண்டுகளில் தக்கபடி திட்டமிட்டு மனித சக்தியைப் பயன்படுத்தியிருந்தால் இது வரையில் எமது நாட்டின் சுயதேவையை அரைப்பகுதியாவது பூர்த்திசெய்திருக்க முடியாதா? அரசாங்கத்தின் திட்டமும் சரியாக அமையவில்லை; மக்களின் மனப்போக்கு மாறி நாட்டு வளர்ச்சிக்கான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இதனால் ஒத்துழைப்புக்கிடைக்கவில்லை. இதனால் நாட்டின் சனத்தொகையில் அதிகமானோர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் கஷ்டப்பட்டும், பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டும் விலைவாசிகள் உயரே ஏறியும் பெரும் கஷ்ட காலம் நெருங்கியிருக்கிறது.

கைத்தொழில் வளர்ச்சி, கைத்தொழில் வளர்ச்சி என்று கூறப்படுகிறதே அவ்வாறாயின் அதன் அர்த்தம் தான் என்ன? கைத்தொழிலை எவ்வாறு வளர்ப்பது? இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புண்டா? அதற்கு உதவக்கூடிய வகையில் தொழில் வல்லுநர்கள் இருக்கின்றனரா? கைத்தொழில் என்றதும் இத்தகைய கேள்விகள் எம்மனதில் வட்டமிடுகின்றன.

இலங்கையராகிய நாம் இப்பொழுதுதான் கைத்தொழில் வளர்ச்சியின் ஆரம்பகட்டத்திலிருக்கிறோம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எங்களுக்

(12 ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மாவட்ட..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ளவர்களுக்கு வெளியூர்களில் வேலைவாய்ப்புக்கள் படிப்படியாகக் குறைந்து வரும்போது உள்ளூரிலேயே வேலை தேட வேண்டி நேரிடும். இதனால் இளைஞர்கள் புதுப்புது வழிகளில் புதுப்புதுத் துறைகளில் சென்று வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ள வேண்டிவரும்.

கடந்தகால அனுபவங்கள் நமக்கு நல்லதொரு பாடமாக அமைய வேண்டும். தற்போது ஓரளவு விவசாயம் செய்யக்கூடிய நிலங்களெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. வரண்ட பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளவேண்டுமெனபுதிய அரசாங்கம் வற்புறுத்தி வரும் திட்டம் பொருளாதாரத்தை விருத்திசெய்ய நல்லவழியாக அமையும்.

ஆகவே பொதுநோக்காக நாம் பார்த்தால் விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றுடன் ஒன்று உதவியாக வளர்ந்தால்தான் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும். யாழ்ப்பாணம் கைத்தொழிலுக்கு முக்கிய இடமளிக்கவேண்டும். பொருளாதார முன்னேற்றத்துக்கு இது அவசியமாகப்பேணப்படவேண்டும். கைத்தொழில் துறையில் கொழும்புக்கு அடுத்ததாக நிற்கக்கூடிய வாய்ப்புக்கள் வசதிகள் யாழ்ப்பாணத்துக்கு இருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு பதிலாக இலங்கையில் அப்பொருட்களை உற்பத்திசெய்யக்கூடிய கைத்தொழில்கள் உருவாக்கப்படல்வேண்டும். பலதரப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு இலங்கை வர்த்தக சந்தை போதுமானது. இக் காரணத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் லாபத்துடன் விற்பனைசெய்யக் கூடியதாகயிருக்கும். இச்சந்தர்ப்பத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாகவும்இருக்கும். தற்பொழுது வேண்டிய தென்னவென்றால் சிறந்த திட்டமும் அதனை செயற்படுத்தும் முறையுமே. அத்துடன் தேசியப்பற்றும் ஒரு வேலையைசெய்யும் உறுதியும் இருந்தால் நாம் எடுத்த நோக்கை அடைய முடியும். பின்தங்கியுள்ள தேசங்களின் முன்னேற்றத்துக்கு கைத்தொழில்பேட்டைகள்மூலம் தான் கைத்தொழில் விஸ்தரிப்பை செய்யலாம் என நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கைத்தொழில் பேட்டைகளை எல்லாஇடங்களிலும் சரிசமமாக நிலைப்படுத்தலாம். இதன் பிரகாரம் 400 கைத்தொழிற்சாலைகளும் 10,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் இடைக்க வசதியுண்டாகும். இக்கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதால் வேறு பல விதமான முறையில்இரண்டு லட்சம் மக்களுக்கு தொழில் பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். யாழ்ப்பாணத்தின் ஜனத்தொகையில் 15 விகிதத்தினர் இப்படிக்கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டால் வேலைசெய்யலாம். இப்படியான கைத்தொழில்களில் ஈடுபடுவதால் வாழ்க்கைத்தரமும்உயர்ந்துநாடும் செழிக்கவழியுண்டாகின்றது

(4-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய எதிர்ப்பை முறியடித்து சுதந்திரம் வழங்கிய டிகாலை பிரிட்டன் முன் மாதிரியாகக் கொள்ளவேண்டும். ஏடனில் அரசியலமைப்பை நிராகரித்து, பார்லிமெண்டைக் கலைத்து ஆட்சியை எடுத்ததுபோல், ஏன் தற்போதைய ரொடீஷிய ஆட்சியை அது கலைக்கக்கூடாது? புதிய அரசியலமைப்பை பிரிட்டன் ரொடீஷியாவில் புகுத்தியே தீரவேண்டும். ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்வதை அது பார்த்துக்கொண்டிருந்தால் ஆபிரிக்காவில் பிரிட்டிஷ் செல்வாக்கு அஸ்தமித்துவிடுவது ஒருபுறமிருக்க, கறுப்பு நிற ஆபிரிக்கா செங்குருதியால் ரணகளமாகும். தீய வெளி சக்திகள் அப்போது ஆபிரிக்காவில் பிரவேசிக்கவும் இடமேற்பட்டுவிடும். இந்த அபவாதத்தை பிரிட்டன் செய்யப்போகிறதா? ஆபிரிக்க மக்களை அனாதைகளாகக் கைவிடப்போகிறதா?

# இன்று

கோண்டாவில், சனி

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வணிகமாணவர்கள் தமக்கென ஒரு வணிக மாணவமன்றத்தை இன்று அங்குரார்ப்பணம் செய்கிறார்கள். இவ்விழாவில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. க. வி. பொன்னம்பலம், திரு. என். சிவநேசன். இ. மகாதேவன் ஆகியோர் சொற்பொழி வாற்றுவார்கள். செல்வி கனகாம்பிகை கணபதிப்பிள்ளை இசை விருந்தளிப்பார்.

# அபராதம்

ஊர்காவற்றுறை, சனி

நெடுந்தீவைச் சேர்ந்த செபஸ்தியன் அந்தோனி அல்லது ஞானமுத்து என்பவருக்கு அதே இடத்தைச் சேர்ந்த தோமஸ் ஞானப்பிரகாசம் அல்ல தம்பிப்பிள்ளை என்பவர் கூர்மையான ஆயுதத்தால் வெட்டிக் காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டி நெடுந்தீவுக் காரியாதிகாரியால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபா 50 அபராதம் விதித்து ஆறு மாதம் நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

வாஷிங்டன், அக். 30

இந்தோ-பாகிஸ்தான் பூசலிலிருந்து விலகிநிற்குமாறு சீனாவுக்கு அமெரிக்கா தனிப்பட்ட முறையில் எச்சரிக்கை விடுத்ததாகஅமெரிக்க அதிகாரிகள்கூறினர். இது நல்ல பலனளித்ததாயும் அவர்கள் கூறினர்.


## வரி விளம்பரம்

### தேவை

ஆங்கில எஸ். எஸ். ஸி. சித்தி பெற்ற கணக்கு, 'டைப்ரைட்டிங்' முதலிய வற்றில் தேர்ச்சி பெற்ற ஒரு பெண் தேவை. விபரங்களுக்கு: நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். எம். எஸ். எம். ஜுனைட், 144, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1308

விவசாய உத்தியோகஸ்தர்கள் தேவை. விவசாயத்தில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். காடு துப்பரவுபடுத்துதல், உணவு உற்பத்தி செய்யும் முறைகளில் அனுபவம் அவசியம். விண்ணப்பிக்கவும்: இல. 150, சென்ற் யோசெப் வீதி, கிருன்ட்பாஸ், கொழும்பு. 1188

### தேவை

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். "சோபனா" இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

'நந்தி' யில் கிடைக்கும்

★ மின்சார உபகரணங்கள் (Electrical Goods)
★ எஸ்-லோன் (S-Lon) நீர்க் குழாய்கள், பீலிகள்,
மின் உறைகுழாய்கள் (Conduit Pipes)
★ ஸ்நான அறைத்தளபாடங்கள் (Sanitary ware)
★ பி. எஸ். ஏ. (B. S. A. சைக்கிள்கள்

நந்தி இன்டஸ்ரிஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிட்டெட்,
20, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

Estd: 1929 S. R. S. போன்: 296
நெசவு நிலையம்
சேலைகள், பரமாஸ் வேட்டிகள், சால்வைகள், பெற்சீட், டவல்ஸ் உற்பத்தியாளர்கள்
எஸ். ஆர். செல்லத்துரை
216, கே. கே. எஸ். ரோட் :: :: யாழ்ப்பாணம்.

சர்வ பூச்சி நாசினி
மெற்றசிஸ்ரொக்ஸ் லெபெசிட் பொலித்தியோன்
METASYSTOX LEBAYCID FOLITHION
Agents :
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரி பிலிப் குணவர்த்தன...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷத்துடனும் ஆரம்பித்த இருவரும் பின்னர் ஒருவரை ஒருவர் எதிர்த்தே வந்திருக்கிறார்கள். அரசியலில் இருந்து வந்த எதிர்ப்பு சொந்த வாழ்வில் புகுந்துவிடவில்லையென்பதற்கு இரு சகோதரர்களுக்கிடையிலும் இன்று நிலவும் ஒற்றுமை ஓர் உதாரணம்.

காலனி ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து மாத்திரம் எதிர்த்தவரல்ல பிலிப். அதற்குத் தலைமை தாங்கி பிரிட்டனிலேயே எதிர்ப்புக் குரலெழுப்பினர். அமெரிக்காவிலுள்ள இலினொஸ், விஸ்கொன்ஸின், சர்வகலாசாலைகளில் அரசியல், பொருளாதாரம், தத்துவ ஞானம் போன்றவைகளைத் தீட்டிக்கொண்டதாக திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு அதே சமயத்தில் மார்க்ஸியவாதம் அழைப்பு விடுத்தது. அதை ஏற்றுக்கொண்ட அவர் அமெரிக்காவிலேயே தமது புரட்சியை ஏற்படுத்திவிட்டு அதை பிரிட்டன் வரையில் கொண்டுசென்றார். இங்கு மார்க்ஸிய ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டார். காலனி ஆதிக்கத்தை எதிர்க்கும் சங்கற்பத்தை பிரிட்டனிலேயே செய்துகொண்டார் என்றால் தவறாகாது.

## மார்க்ஸீய இயக்கம்

படிப்பு முடிந்து 1932-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை திரும்பிய திரு. குணவர்த்தன உடனடியாகவே தமது மார்ஸீய இயக்கத்தை இங்கு ஆரம்பித்தார். இன்று எதிர்க்கட்சியிலிருந்து மோதிக்கொண்டிருக்கும் டாக்டர் என். எம்மையும், இதர மார்ர்ஸீய தூண்களையும் சேர்த்து எதிர்க்கட்சி ஒன்றைத் தாபித்தார். டாக்டர்கள் கொல்வின் ஆர். டி. சில்வா, எஸ். ஏ விக்கிரமசிங்க, சமரக்கொடி போன்றவர்களும் இந்தச் சமயத்தில் பிலிப் கோஷ்டியில்தானிருந்தார்கள். மார்க்ஸீய வாதத்தில் திளைத்துப்போயிருந்தவர்களுக்கு பிலிப்பினுடைய வருகை பெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. காலனி ஆதிக்கத்தை முழுவேகத்துடனும் எதிர்க்கவேண்டுமானல் பலம்வாய்ந்தஅரசியல் ஸ்தாபனமொன்று இருக்கவேண்டும் என்பதையுணர்ந்த இவர்கள் 1935-ம் ஆண்டில் இலங்கை சமசமாஜக் கட்சியை ஸ்தாபித்தார்கள்.

அரசியல் வாழ்க்கையில் முழுப்பலத்துடனும் வாலிபவேகத்துடனும் இறங்கிய இவருடைய வாழ்க்கை மேடும் பள்ளமும் நிரம்பியதாகவே இருந்துவந்திருக்கிறது. போராட்டம், வேலைநிறுத்தம், சிறைச்சாலை, கஷ்டநஷ்டம் எல்லாம் இவருடன் சம்பந்தப்பட்ட சொற்களே.

## போகம்பரைச் சிறையில்...

கட்சி ஆரம்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டில் (1936-ல்) டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ் சட்டசபைக்கான இரண்டாவதுதேர்தல் நடைபெற்றது. சமசமாஜியாகப்போட்டியிட்டு அவிசாவலைப்பகுதியின் சட்டசபை உறுப்பினராஞர். வெற்றியின் பலாபலனைக் காண்பதற்கு முன்னர் இரண்டாவதுயுத்தம் மூண்டுவிட்டது- இது 1939-ல். யுத்தத்தைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் சமசமாஜக் கட்சிக்கு தடைவிதித்து தலைவர்களைப் பிடித்து கண்டியிலுள்ள போகம்பரையில்சிறைவைத்தது. டாக்டர் என். எம்., டாக்டர் கொல்வின், திரு. எட்மன்ட் சமரக்கொடி ஆகியவர்களும் இவருடன் சிறைவைக்கப்பட்டனர்.

சிறையில்தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் திகைக்க வைக்கும் சம்பவம் நிகழ்ந்தது. இலங்கையிலிருந்து பிரிட்டன் வரையில் ஒரே திகிலாகவிருந்தது. இலங்கை மக்களே திகைத்துப்போஞர்கள்.

பிலிப்கோஷ்டியினர் மூளைசாலிகள், பலசாலிகள். திட்டமிடக்கூடிய திறமைசாலிகள். இப்படிச் சகல சக்திகளும் நிரம்பிய ஒரு கோஷ்டி சும்மாவிருக்குமா? சிறையிலிருந்து தப்புவதெனத்திட்டமிட்டார்கள். திட்டமும் நிறைவேறியது.

அது எப்படித்தெரியுமா? ''ஜெயிலர்'' என்று சொல்லப்படும் சிறைக்காவலர் இருக்கிறரே, அவரையும் கூட்டிக்கொண்டு தப்பிவிட்டார்கள். ஜெயிலருடைய பெயர் திரு. எம். டி. சொலமன்ஸ்.

தப்பியவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரைப்பகுதி ஒன்றிலிருந்து இந்தியா சென்றுர்கள். இறுதியில் இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

1945-ல் யுத்தம் முடிவடைந்ததும் சமசமாஜக் கட்சி மறுபடியும் இயங்க ஆரம்பித்தது. சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் 1947-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் பெரும் பங்கெடுத்துக் கொண்டது. திரு. குணவர்த்தன மறுபடியும் அவிசாவலைத் தொகுதியில் போட்டியிட்டு சுமார் 12,000 அதிகப்படிவாக்குகளால் வெற்றிபெற்றுர். ஆனல் இக்காலத்திலும் இவர் தமது 5வருட காலத்தையும் பூர்த்தியாக்க முடியாமல் போய்விட்டார். பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தமொன்றை நடத்தி அதனுல் மூன்றுமாத சிறைத் தண்டனை கிடைத்ததால்பாராளுமன்ற ஸ்தானத்தை இழந்தார். இதைத் தொடர்ந்து இடைத்தேர்தல் நடைபெற்றது. இவருடைய மனைவி திருமதி குசுமா குணவர்த்தன போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

## புரட்சிவாத கட்சி ஆரம்பம்

தேர்தல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சிக்கல்களினல் இவர் சற்றேனும் தயங்கிவிடவுமில்லை; தளர்ந்துவிடவுமில்லை. இந்தக்காலத்தில் கட்சிக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. இந்திய லெனினிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவுக்கும் இவருக்கும் ஏற்பட்ட கருத்துவேற்றுமையினல் 1950-ம் ஆண்டில் சமசமாஜக்கட்சியை விட்டு [illegible] சமசமாஜக் கட்சியை ஸ்தாபித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியுடனும் முன்னணியமைத்தார்.

1952-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும்போட்டியிடமுடியாமல் போன இவர் 1956-ல் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து மக்கள் ஐக்கியமுன்னணியை ஸ்தாபித்து பெரும்வெற்றியும் கண்டார் இக்காலத்தில் இவர் பண்டாரநாயகா அரசாங்கத்தில் உணவுவிவசாய மந்திரியாகவும் நியமனம் பெற்றுர்.

## நெற்காணிச்சட்டம் ஏற்படுத்திய புயல்!

முற்றிப்பழுத்த கொள்கைகளையெல்லாம் அமுலாக்கிக்கொண்டு வந்தபோதுதான் கொந்தளிப்பைஏற்படுத்திய நெற்காணிச்சட்டம் தலைதூக்கியது. இதனுல் மந்திரிசபை அங்கத்தவர்களுக்கிடையில் பெருங்குழப்பம் ஏற்பட்டு மாஜிமந்திரி திருமதி விமலாவிஜயவர்த்தனவின் ஆதரவுடன் புத்தரக்கித்த தேரோ விவசாயிகள் கோஷ்டிகளைக்கொண்டு வந்து போராட்டம் நடத்திஞர். இந்த நடத்தை திரு. குணவர்த்தனவின் வாழ்க்கையில் மேலும்மாற்றத்தை உண்டாக்கிவிட்டது. 1959 மே மாதத்தில் மோதல் பலமடைந்ததும் மந்திரிசபையிலிருந்து இவரும் இவரது சகாவுமான திரு. வில்லியம் சில்வாவும் பதவிதுறந்தனர்.

இவர்கள் இருவரும் வெளியேறியதைத் தொடர்ந்து பண்டாரநாயகாவினுடைய அரசாங்கமும் ஆட்டங்கண்டு அடுத்த ஆண்டில் தேர்தலையும் நடத்தியது. இதில் எம். ஈ. பி. 89 அபேட்சகர்களை நிறுத்திய போதிலும் ஒரு ஸ்தானத்தையே பெற்றது. இதே நிலைமைதான் சென்ற பொதுத்தேர்தலிலும் ஏற்பட்டது. ஆனல் திரு. குணவர்த்தன மாத்திரம்வெற்றிபெற்று திரு. டட்லி சேனநாயக்காவுடைய தேசிய மந்திரி சபையில் இன்று வர்த்தக மீன்பிடிமந்திரியாகப் பதவி வகிக்கிறுர்.

வாலிபவேகம் குறைந்துவிட்டாலும் திரு. குணவர்த்தன பொதுவேலைகளைப் பொறுத்தமட்டில் வேகம் குறையாத ஒருவராகவே இருக்கிறுர்.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவே தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததாகக் கூறும் இவருக்கு இன்று 64 வயது.

# 3 வருடங்களில் நவீன ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையென வர்ணித்துவிட்டு திருக்கோணமலைக் கோணேஸ்வர ஆலயம், மன்ஞர் திருக்கேதீச்சரம், சிலாபத்துக்கருகிலுள்ள முன்னேச்சரம், கீரிமலையிலுள்ள நகுலேச்சரம் ஆகிய ஈஸ்வர ஆலயங்கள் இந்நாட்டிலுள்ள இந்துக்களுக்குமட்டுமல்ல உலகிலுள்ள சைவ மக்கள் அனைவரும் வணங்கும் ஸ்தலங்களென்றும் நகுலேச்சரத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்றும் கேட்டுக்கொண்டார்.

# "நிலத்தின் செல்வங்களை பயன்படுத்தவேண்டும்"

போயிட்டி மக்களின் வரவேற்புக்குப் பதிலளித்து மந்திரி குணவர்த்தன பேசுகையில் தேசிய அரசாங்கம் சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடின்றி சகல இனத்தவரையும் சமமாக நடத்துமென்றும் இதற்காகவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதென்றும் கூறிஞர். ''எங்கள் வணக்க ஸ்தலங்களையும் புனித ஸ்தலங்களையும் நாங்கள் பாதுகாக்க வேண்டும். கீரிமலையில்நான் நீராடியிருக்கிறேன். என் கறுத்தமேனியில் அதன் நீர் பட்டபோது நான்பெற்ற இன்பத்தை இன்னும் மறக்கவில்லை. இன்றுபெருகி வரும் ஜனத்தொகைக்கு வேலை வாய்ப்பளிக்கும் பிரச்னை சுலபமல்ல. தொழில் விருத்தியின் மூலம் தான் வேலையில்லாப்பிரச்னையைத்தீர்க்கவும் நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியும். தொழில் விருத்திக்கு நிலத்தின் கீழ் உள்ள வளங்களை-செல்வங்களை நாம் பயன்படுத்தவேண்டும். எமது அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும்முயற்சியைத் தொடர்ந்து செய்யவேண்டும். சிமெந்துத்தொழிற்சாலையை விஸ்தரிக்கும் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற தேசிய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்காக காங்கேசன்துறையில் இன்னும் இரண்டரை மூன்று வருடங்களுக்கிடையில் நவீன துறைமுகம் அமைக்கப்பட்டு முடிந்துவிடும். இப்பகுதிமக்கள் தங்கள் உடலுழைப்பினுலும் முயற்சியினுலும்தான் இப்பகுதி நிலத்தைப்பயன்படுத்தியுள்ளனர். சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் அவர்கள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டியதுதான். ஆனல் இதுவிஷயத்தில் விஞ்ஞானிகளினதும் தொழில் [illegible] நிபுணர்களினதும் [illegible]துக்கே முதலிடம் கொடுக்க வேண்டியது அவசியம். என்ருலும் உங்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் அனுதாபத்துடன் ஆழ்ந்த கவனம் செலுத்திப் பரிசீலனை செய்வேன்'' என்று மந்திரி உறுதியளித்தார்.

## வாளி உற்பத்தி செய்யும் இடம்

போயிட்டியிலிருந்து மந்திரி குணவர்த்தன தெல்லிப்பழையிலுள்ள 'எல்பிகெ[illegible]' வாளித்தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தொழிற்சாலை வாயிலில் மந்திரியையும், திரு. செல்வநாயகத்தையும் தொழிற்சாலை அதிபர் திரு. சின்னத்தம்பி மலர்மாலைசூட்டி வரவேற்று மங்கலவாத்தியம் முழங்க தொழிற்சாலைக்குள் அழைத்துச் சென்று வாளிகள் தயாரிக்கும் ஒவ்வொரு பகுதியையும் விளக்கிக்காட்டினர். மந்திரியும் ஆர்வத்துடன் ஒவ்வொரு பகுதியையும் பார்வையிட்டார். இங்கு சிற்றுண்டி அருந்தியபின் மந்திரி சிமெந்துத்தொழிற்சாலை ''கெஸ்ட் ஹவுசுக்கு''ச்சென்று சிறிது நேரம் தங்கியபின் சிமெந்துத்தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

# "ஒருபாடமாக இருக்கட்டும்"

புதுடில்லி, அக். 30

காஷ்மீரின் உள்விவகாரத்தை விவாதிக்க ஐ. நா. வுக்கு அதிகாரம் கிடையாது என்று இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி இங்குதெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. சாஸ்திரி உரை நிகழ்த்துகையில்தான் [illegible] கண்டவாறு கூறிஞர். ''பாகிஸ்தான்- சீன கூட்டு'' பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்தோனேஷியாவில் தற்பொழுதுசீனவுக்கு நடந்தது பாகிஸ்தானுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும் என்ருர்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
NANCY KWAN
in
HONEYMOON
H TEL
(Panavision-M. G. M's Color)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொலி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

'நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்ன, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம ஆண்டுஅக்டோபர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org